காய்கறிகள்

காய்கறி சாகுபடி

ஆசிரியர்கள் :

சீமந்தனி ராமதாஸ்

வெ. நா. மாதவராவ்

சு. தம்புராசு

வெளியீடு :

தகவல் தொடர்பு நிலையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

கோயமுத்தூர் 641003

பொருளடக்கம்

			பக்கம்
1.	தக்காளி	...	1
2.	கத்தரி	...	4
3.	மிளகாய்	...	6
4.	வெண்டை	...	8
5.	பரங்கி, பூசணி	...	10
6.	புடலை	...	13
7.	பாகற்காய்	...	15
8.	பீர்க்கன்	...	16
9.	முள்ளங்கி	...	17
10.	காரட்	...	19
11.	பீட்ரூட்	...	21
12.	டர்னிப்	...	23
13.	தண்டுக்கீரை	...	25
14.	முட்டைக்கோஸ்	...	26
15.	காலிபிளவர்	...	28
16.	நூல்கோல்	...	30
17.	பட்டாணி	...	31
18.	சீமை அவரை (பீன்ஸ்)	...	34
19.	கொத்தவரை	...	36
20.	வெங்காயம்	...	37
	பயிர் பாதுகாப்பு அட்டவணை	...	

முன்னுரை

மனிதன் வலிவுடனும் வனப்புடனும் வாழவும், நாட்டின் வளம் பெருகவும், அவனுடைய உணவில் காய்கறிகளின் பங்கு மிகவும் முக்கியமானது. புரதச் சத்துக்கள், கனிம உப்புக்கள் மற்றும் உயிர்ச் சத்துக்கள் ஆகியவற்றைக் கொடுத்து நோய்களைத் தடுக்கவல்ல காப்பு உணவுகள் காய்கறிகளில் நிறைந்துள்ளன. ஆதலினால் அன்றாட உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணவியல் அறிஞர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். பசுமைப் புரட்சியில் பல்வேறு திட்டங்களின் மூலம் தானியங்களின் உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைந்து வருகிறோம். ஆனால் நிறை உணவு (balanced diet) நம்மில் பலர் உட்கொள்வதில்லை. ஒவ்வொருவரும் தேவையான அளவு, அதாவது சராசரி 375 கிராம் தானிய வகைகளை தினமும் உட்கொள்கிறார்கள். அன்றாட உணவில் சுமார் 325 கிராம் காய்கறிகளைச் சேர்த்து உட்கொள்ள வேண்டும். என்று உணவியல் ஆராய்ச்சிகளின் முடிவுகள் கூறுகின்றன. அதில் 125 கிராம் கீரைகளாகவும், 100 கிராம் கிழங்குகளாகவும் மீதமுள்ள 100 கிராம் இதர காய்கறிகளாகவும் இருக்கவேண்டும். ஆனால் தற்பொழுது நாம் ஒவ்வொருவரும் நாள் தோறும் உட்கொள்ளும் சராசரி காய்கறிகளின் மொத்த அளவு சுமார் 100 கிராம் ஆகும். இது மிகவும் குறைந்த அளவேயாகும்.

குறிப்பிட்ட அளவு காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ள முடியாததற்குக் காரணம் மொத்தக் காய்கறிகளின் உற்பத்தி மிகக் குறைவேயாகும். ஆகையால் அவைகளின் விலைகளும் அதிகமாக உள்ளன. அதன் காரணமாக பெரும்பான்மையானவர்கள் வாங்கி உட்கொள்ள முடிவதில்லை. மேலும் நமது உணவுப் பழக்கமும் இந்த குறைபாட்டிற்கு ஒரு காரணமாகும். தமிழ்நாட்டில் 1.35 லட்ச எக்டேரில் மட்டுமே காய்கறி உற்பத்தி செய்யப்பட்டுவருகிறது. அதிலிருந்து சராசரி 29.78 டன் காய்கறி உற்பத்தி செய்யப்படுவதாக புள்ளி விவர ஏடுகள் கூறுகின்றன. அடுத்துள்ள மாநிலங்களிலிருந்து நம் மாநிலத்திற்கு ஒரு அளவு காய்கறிகள் வந்து கொண்டிருந்தாலும், நம் மாநிலத்திலிருந்து அடுத்துள்ள மாநிலங்களுக்கு சிறிதளவு காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டின் ஜனத்தொகை சுமார் 411 லட்சம். இந்தத் தொகை அதிகரித்து வருவதால் நாம் வேண்டிய அளவு காய்கறிகளை உணவில் சேர்த்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். அதன் காரணமாக மக்கள் வலிவிழந்து நோய்களால் தாக்கப்படுவதுடன், அவர்களின் தேக ஆரோக்கியமும் குன்றிவிடுகிறது. ஆகையால் காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழி முறைகளை உணர்ந்து செயல்பட வேண்டிய அவசியமும், அவசரமும் நன்கு புலனாகிறது.

காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்குவதில் உயர் ரக விதைகள், நவீன கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள், தக்க தருணத்தில் உபயோகிக்க வேண்டிய பயிர் பாதுகாப்பு முறைகள் முதலியவை மிக முக்கியமானவை. அத்துடன் காய்கறிகள் பயிரிடும் பரப்பளவை அதிகமாக்க வேண்டும். வீட்டுக் காய்கறித் தோட்டங்களை ஆங்காங்கே அமைத்து குடும்பத்திற்கு வேண்டிய உயர்ரக, பசுமையான புதிய காய்கறிகளை குறைந்த விலையில் பெறலாம். இது காறும் காய்கறிகளை பற்றிய ஆராய்ச்சிக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரப்படவில்லை. அதன் விளைவாக பல பருவங்களுக்கும் மற்றும் பல பகுதிகளுக்கும் வேண்டிய புதிய ரகங்கள் தற்போது காய்கறிகளில் இல்லை. இருக்கின்ற ஒன்றிரண்டு ரகங்கள் எல்லாப் பருவங்களுக்கும் தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் சிபாரிசு செய்யப்பட்டு வருகிறது. அதனால் எதிர்பார்க்கும் அளவு அதிக மகசூல் கிடைப்பதில்லை மற்றும் காய்கறிகளுக்குண்டான கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள் பற்றிய ஆராய்ச்சியும் தீவிரப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. காய்களில் பல புதிய ரகங்கள் கண்டு பிடிக்கவேண்டும். அவைகள் பூச்சி, நோய் தாக்காத ரகங்களாகவும். அதிக விளைச்சல் தரவல்லதாகவும், குறைந்த வயதுடையதாகவும், சத்துணவுகள் நிறைந்தவைகளகாவும் இருத்தல் அவசியம். இவற்றையெல்லாம் கருத்தில் ஆழ்த்தி, அனைத்திந்திய அடிப்படையில் முன்னேறக்கூடிய அளவுக்கு காய்கறிகளின் ஆராய்ச்சிக்கு கோயமுத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. தமிழ் நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட காய்கறிகள் ஆராய்ச்சி மூலமாக கோ. 1 தக்காளி, கோ. 1 தண்டுக்கீரை, கோ. 1 பரங்கி, கோ. 1 பூசணி போன்ற உயர் ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பல காய்கறிகளுக்கு கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளும் வகுக்கப்பட்டிருக்கிறது. இவைகளை இந்நூலில் திருமதி சீமந்தினி ராமதாஸ், டாக்டர் வி. என். மாதவ ராவ், திரு. சு. தம்புராசு ஆகியவர்கள் நல்ல முறையில் விவசாய பெருங்குடி மக்களுக்கு நன்கு பயன்படும் முறையில் எழுதியிருக்கிறார்கள். விவசாய விரிவாக்கத் துறையினரும் காய்கறிகள் பயிரிடும் பரப்பளவை அதிகமாக்கி வீட்டுக் காய்கறித் தோட்டங்களை ஊக்குவித்து காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறேன்,

கோ. அரங்கசாமி
துணைவேந்தர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயமுத்தூர்
1—2—1973

தக்காளி

உணவுச் சத்துக்கள் அதிக அளவில் உள்ள காய்கறிகளில் தக்காளி மிகவும் முக்கியமானது. முதன் முதலில் தென் அமெரிக்காவில் பயிரிடப்பட்டுப் பின்பு உலகமெல்லாம் பரவியது என்று புத்தகங்கள் வாயிலாக அறிகிறோம். முக்கியமாக உயிர்ச்சத்து 'ஏ' மற்றும் 'சி' யுடன் மற்ற உயிர்சத்துக்களும், தாதுப் பொருட்களும் தக்காளியில் அதிகமாக உள்ளது. தக்காளியைப் பலவகைகளில் உபயோகிக்கலாம். உதாரணமாக பொறியலாமவும் சாம்பாரிலும், இனிப்பு மற்றும் காரமுள்ள ரசமாகவும், ஊறுகாயாகவும், 'ஜாம்', 'கெட்சூப்' போன்றவைகளாகவும் உபயோகிக்கலாம்.

தேவையான தட்பவெப்ப நிலையும், மண்சாரமும் :-

பனியில்லாத, சம சீதோஷ்ண நிலையுள்ள இடங்களில் தக்காளி நன்ருகப் பயிரிடலாம். 18° முதல் 27° சென்டிகிரேடு வெப்பம் உள்ள பருவங்கள் மிகவும் சிறந்தது. மணல் கலந்த செம்மண் பூமி தக்காளி பயிரிடச் சிறந்ததாகும். மண்ணில் 6 முதல் 7 காறை காடித் தன்மை (pH) உள்ள நிலங்கள் சாலச்சிறந்தது.

பருவம் :-

மார்கழி-தை, வைகாசி-ஆனி மற்றும் ஐப்பசி-கார்த்திகை போன்ற மாதங்களில் தக்காளி விதைப்பது நல்லது.

பொறுக்கு ரகங்கள் :-

கோ.1. தக்காளி :- கோயமுத்தூரில் உற்பத்தியாகி தமிழ்நாடு முழுவதும் சிபாரிசு செய்யப்பட்ட ரகமாகும். 135 நாட்கள் கொண்ட ஒரு குறுகிய கால ரகமாகும். ஒரு ஏக்கருக்கு 15,000 கிலோ விளைச்சல் பெறலாம். செடிகள் அதிகமாகப் படராமல் குட்டையாக வளரும் தன்மை படைத்ததால் செடிகளைக் குச்சி வைத்துக்கட்ட வேண்டிய அவசியமில்லை. இந்த ரகத்தில் கிடைக்கும் பழங்கள் பெரிய அளவுள்ளதாகவும், உருண்டையாகவும் இருககும். அவற்றில் குறைந்த விதையும், நிறைந்த சதையும் அமிலச்சத்து சிறிதளவு குறைவாகவும் இருக்கும்.

இதைத் தவிர பாரத விவசாய ஆராய்ச்சிக்கழகத்தின் புதிய ரகங்களாகிய 'பூசா ரூபி', 'சியூ' போன்ற ரகங்களையும் பயிரிடலாம் 'பூசா ரூபி' யும் ஒரு குறுகிய காலத் தக்காளி. நடுத்தர அளவுள்ள

சிகப்பு நிறமுள்ள பழங்களை உடையது. ஒரு ஏக்கருக்கு 12,000 கிலோ மகசூல் பெறலாம். பழங்கள் சிகப்பு நிறமுள்ளதாகவும், பெரிய அளவுள்ளதாகவும் இருக்கும். முன் கோடைகாலப் பருவத் திற்கு ஏற்றது.

சாகுபடி குறிப்புகள்:

பயிர் அமைக்கும் முறை:

நிலத்தை நன்ருக உழுது கட்டிகளில்லாது பண்படுத்தவும்; சரியளவு மணலும், செம்மண்ணும் தொழு உரமும் கலந்து 15செ.மீ. உயரத்தில் ஒரு சதுரமீட்டர் அளவுள்ள சதுரப் பாத்திகள் போடவும். உயரப் பாத்திகள் அமைத்தால் வடிகால் வசதியிருக் கும். மற்றும் சில பூஞ்சாள நோய்கள் நாற்றுகளைத் தாக்காது. வேர் அழுகல் நோய் வராமல் தடுக்க உயரப் பாத்திகள் அமைத்த பிறகு கரையும் 'செரசான்' என்ற மருந்தை (ஒரு கிலோ மருந்தை 1000 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது 'பைடலான்' (தாமிர பூசணக் கொல்லி மருந்து) ஒரு கிலோ மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கலந்து பாத்திகளின்மேல் ஊற்றி இரண்டு நாட்கள் விடவும். பின்பு அக்ரசான் அல்லது செரசானில் கலந்த தக்காளி விதைகளை (கிலோகிராம் விதைக்கு இரண்டு கிராம் மருந்து வீதம் கலந்து), 10 செ. மீ. இடைவெளியில் 2 செ.மீ. ஆழமுள்ள சோடு களில் பரவலாகத் தூவவும். மணலினுல் மூடவும். பூவாளியால் உடனே தண்ணீர் விடவும். பாத்திகளைச் சுற்றிலும் பி. எச். சி. அல்லது டி. டி. டீ 10 சத தூளைத் தூவி விதைகளை எறும்புகள் தாக்காமல் பாதுகாக்கவும். விதைத்த பின் வாரம் ஒருமுறை கரையும்'செரசான்'அல்லது தாமிர பூசணக்கொல்லி மருந்துகளைப் பாத்திகளின் மேல் பூவாளியில் ஊற்றவும்.

விதைத்து இரண்டு வாரங்கள் கழித்து நாற்றுக்களைப் பூச்சி கள் தாக்காமல் இருக்க 50சத டி.டி.டீ,மருந்தை (200கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவும். விதைத்து 25 முதல் 30 நாட்களில் நாற்றுக்கள் நடுவதற்குத் தயாராகிவிடும் நாற்றுக் கள் வளர்ச்சி குன்றியிருந்தால் நடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன் ஞல் அம்மோனியம் சல்பேட் கரைத்த நீரை பாத்திகளில் ஊற்ற வும்.

நிலத்தைப் பண்படுத்தலும் நாற்று நடுதலும்:

நடவு செய்யப்போகும் நிலத்தை நான்கு முறை உழுது

ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் அல்லது 'கம்போஸ்ட்' போடவும். சால் பிடிக்கும் கலப்பையால் 75 செ. மீ. இடை வெளியில் பார் பிடிக்கவும்; பார்களின் பக்கவாட்டில் பாதி உயரத்திற்குக் கீழே இரசாயன உரங்களைப் போட்டு மூடிவிடவும். ஏக்கருக்கு 100 கிலோ அம்மோனியம் சல்பேட்டும், 200 கிலோ சூபர்பாஸ்பேட்டும், 40 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாசும் அடி உரமாக இடவும். நன்ருகவளர்ந்த நாற்றுக்களைப் பார்களின் பக்கவாட்டில் 60 செ.மீ. இடைவெளியில் நடவும்.

பின் செய் நேர்த்தியும் நீர் பாய்ச்சுதலும் :

மூன்று அல்லது நான்கு முறை களைஎடுத்து நிலத்தைச் சுத்தமாக வைக்கவும் நட்டு ஒரு மாதம் கழித்து, களைஎடுத்து ஏக்கருக்கு 100 கிலோ அம்மோனியம் சல்பேட் (20 கிலோ தழைச்சத்து) மேலுரமாகப் போட்டு செடிகளுக்கு நன்ருக மண் அணைக்கவும். பார்களின் ஓரத்தில் நட்ட செடிகள் மண் அணைத்தவுடன் பார்களின் நடுவில் வரவேண்டும். உடனே நீர்ப்பாய்ச்சவும். கோ. 1 தக்காளியைத் தவிர வேறு படரும் ரகங்களாக இருந்தால் செடிகளை மூங்கில் குச்சிகளில் சேர்த்துக் கட்டினுல் பழங்கள் சேதமாகாமல் செடிகளிலிருந்து அதிக மகசூல் பெறலாம்.

பயிர்ப் பாதுகாப்பு ;-

தனி அட்டவணையைப் பார்க்கவும்.

அறுவடை :

விதைத்து 100 நாட்கள் கழித்து பழங்களை அறுவடை செய்யலாம். மூன்று தினங்களுக்கு ஒருமுறை பறிக்கலாம். ஏக்கருக்கு சராசரி 10,000 கிலோ மகசூல் கிடைக்கும்.

தக்காளி பயிரிட ஒரு ஏக்கருக்கு வேண்டிய பொருட்கள் :-

விதை: 200 கிராம்

தொழு உரம்: 10 டன்

இரசாயன உரம்:	அம்மோனியம் சல்பேட்	:	200 கிலோ
	சூபர் பாஸ்பேட்	:	200 கிலோ
	மியூரியேட் ஆப் பொட்டாஷ்	:	40 கிலோ

பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் :

(ஒரு ஏக்கருக்கு ஒருமுறை தேவைப்படுவது)

சால்விரக்ஸ்	: 8 கிலோ
செவிமால்	: 750 கிராம்
கார்பரைல்	: 1 கிலோ
தூவும் அக்ரசான் அல்லது செரசான்	: 500 மி. கிராம்
கரையும் செரசான்	: 2 கிலோ (நாற்றங்காலுக்கு 1 கிலோ நட்ட நாற்றுகளுக்கு 1 கிலோ)
டைத்தேன், Z. 78	: 1 கிலோ

கத்தரி

இந்தியாவில் தொன்றுதொட்டு பயிரிடப்படும் காய்கறிகளில் கத்தரி ஒன்ருகும். கத்தரிக்காயை வருடம் முழுவதும் பயிரிடலாம். கத்தரிக்காயில் உயிர்ச்சத்து 'ஏ', 'சி' மற்றும் பல உணவு சத்துக்கள் உள்ளன. மேலும் பல மருத்துவப் பயனுமுள்ள ஒரு காய்கறியாகும்.

தேவையான தட்பவெப்ப நிலேயும், மண் சாரமும் :

பனி குறைந்த சமஅளவு சீதோஷ்ணநிலேயுள்ள பருவங்களில் பயிரிடலாம், நீண்ட காலப் பயிராக உள்ளதால் பகல் மற்றும் இரவு நேரங்களில் சராசரி வெப்ப அளவு உள்ளதாக இருக்க வேண்டும். பலவகை மண்ணில் கத்தரிக்காயைப் பயிரிடலாம், இருப்பினும் மணல் கலந்த வடிகால் வசதியுடைய இருபொறை பூமியே (loamy soil) சிறந்தது.

பயிரிடும் பருவம் :

தை முதல் ஆனி வரையும், மார்கழி முதல் வைகாசி வரையும் வைகாசி முதல் ஐப்பசி வரையும் கத்தரிக்காயை பயிரிடலாம்,

பொறுக்கு ரகங்கள் ;-

1. **வெள்ளேக் கத்தரி:** 150 நாட்கள் வயதுள்ள் ஒரு ரகம். காய்கள் வெள்ளே நிறமாகவும், நடுத்தர அளவுள்ளதாகவும்

இருக்கும். எல்லாப் பருவங்களிலும் பயிரிடலாம். ஏக்கருக்கு சராசரி 8,000 கிலோ மகசூல் பெறலாம்.

2. **ஊதா நீளம்:** குறுகிய கால ரகம், (120 நாட்கள்), காய்கள் ஊதா நிறமுள்ளதாகவும், நீளமாகவும், மெலிந்தும் இருக்கும். எல்லாப் பருவங்களிலும் பயிரிடலாம். காய்ப்புழு அதிகமாகத் தாக்காது. சராசரி ஏக்கருக்கு 9,000 கிலோ மகசூல் பெறலாம்.

3. **வரிக்காய்:** நடுத்தர வயதுள்ள ரகம். காய்கள் ஊதா நிறக் கோடுகள் உள்ளதாகவும், நீண்ட உருண்டை வடிவமுள்ளதாகவும், பெரியதாகவும் இருக்கும். சமையலுக்கு மிகவும் ருசியாகவும் நீண்ட நாட்களுக்குக் கெடாமலும் இருக்கும்.

நாற்றங்கால்: தக்காளிக்குச் செய்வதைப்போல்,

சாகுபடி குறிப்புகள்:

நிலத்தைப்பண்படுத்தலும் நாற்று நடுதலும்:-

நடவு செய்யப்போகும் நிலத்தை நன்கு பண்படுத்தி 75செ.மீ. இடைவெளியில் பார் ஓட்டவும். பார்களின் பக்கவாட்டில் ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்தும், 20 கிலோ மணிச்சத்தும், மற்றும் 12கிலோ சாம்பல் சத்தும் தரவல்ல இரசாயன உரங்களை அடியுரமாகப் போடவும். 30 முதல் 35 நாட்கள் வயதுள்ள நன்கு வளர்ந்த நாற்றுக்களைப் பார்களின் பக்கவாட்டில் 60 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நடுவதற்கு முன்னால் ஹெக்டேருக்கு 10 கிலோ வீதம் 'டைல்டிரின்' அல்லது பி.எச்.சி. 5 சதத்தூளைப் பார்களின் பக்கவாட்டில் போட்டு வேரைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும்.

பின் செய் நேர்த்தியும் நீர்ப்பாய்ச்சுதலும் :-

மூன்று அல்லது நான்கு முறை களை எடுத்து நிலத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும், நாற்றுக்கள் நட்ட மூன்று வாரங்கள் கழித்து ஏக்கருக்கு 10 கிலோ தழைச்சத்தும், அடுத்து மூன்று வாரங்கள் கழித்து 10 கிலோ தழைச்சத்தும் போட்டு செடிகளுக்கு மண் அணைக்கவும். வாரம் ஒருமுறை நீர்ப்பாய்ச்சவும்.

பயிர் பாதுகாப்பு :

தனி அட்டவணையைப் பார்க்கவும்.

அறுவடை :- வாரம் ஒருமுறை காய் பறிக்கவும். ஏக்கருக்கு சராசரி 8,000 கிலோ மகசூல் கிடைக்கும்.

கத்தரி பயிரிட ஒரு ஏக்கருக்கு வேண்டிய பொருட்கள் ;-

விதை: 200 கிராம்

உரங்கள்: தொழு உரம்	:	10 டன்
அம்மோனியம் சல்பேட்	:	200 கிலோ
சூபர் பாஸ்பேட்	:	120 கிலோ
மியூரியா ஆப் பொட்டாஷ்	:	25 கிலோ

பயிர் பாதுகாப்பு மருந்துகள் ;-

சால்விரக்ஸ்	:	12 கிலோ
செவிமால்	:	750 கிலோ
தயோடான்	:	600 மி.லி.
கார்பரைல்	:	1 கிலோ
கரையும் செரான்	:	1 கிலோ (நாற்றங்காலுக்கு)
கந்தகத்தூள்	:	10 கிலோ

மிளகாய்

இந்தியாவில் உள்ள தாளிதப் பொருட்களில் மிளகாய் மிகவும் முக்கியமானது. அமெரிக்காவிலிருந்து மற்ற நாடுகளுக்கு உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டதாக கூறப்படுகிறது. இந்தியாவில் அனைத்து மாவட்டங்களிலும் பயிரிடப்படுகிறது. தமிழ் நாட்டில் 62,000 ஹெக்டேர் நிலத்தில் மிளகாய் சாகுபடி. செய்யப்படுகிறது. வரமிளகாய் பல அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி அதிகரிக்கப்படுகிறது, மிளகாயில் உயிர்ச்சத்து 'சி' மிக அதிக அளவிலும் உயிர்ச்சத்து 'ஏ' சுமாரான அளவிலும் மற்றும் புரதசத்து தாதுப்பொருட்கள் போன்றவையும் உள்ளன.

தேவையான தட்பவெப்ப நிலையும் மண் சாரமும் :

சராசரி கடல் மட்டத்திற்குமேல் 7,000 அடி வரை உயரம் உள்ள பகுதிகளில் மிளகாய் பயிரிடலாம். சுமாரான வெப்பமும் சிறிதளவு ஈரக்கசிவும் உள்ள சீதோஷ்ண நிலை இருக்க வேண்டும். உறைபனி உள்ள இடம் மிளகாய் சாகுபடிக்கு ஏற்றதல்ல. 20° முதல் 27° செ. கி- வெப்பம் உள்ள சீதோஷ்ண நிலை சிறந்தது.

சராசரி வருடத்தில் 60 செ.மீ. முதல் 120 செ.மீ. அளவு மழை கிடைக்கும் பகுதியில் மானாவாரிப் பயிராக மிளகாய் பயிரிடலாம். எல்லாவித மண் வகைகளும் மிளகாய் சாகுபடிக்கேற்றது. எனினும் கரிசல் வகை மண் மானாவாரிப் பயிருக்கு உகந்தது. ஆயினும் வடிகால் வசதியுடன் கூடிய மணல் கலந்த பூமிகளே இறவைப் பயிருக்குச் சிறந்தது.

பயிரிடும் பருவம்;

1. மாசி-பங்குனி முதல் புரட்டாசி-ஐப்பசி வரை.
2. சித்திரை-வைகாசி முதல் கார்த்திகை-மார்கழி வரை.
3. ஆவணி-புரட்டாசி முதல் பங்குனி-சித்திரை வரை.

பொறுக்கு ரகங்கள் :-

கே. 1. (கோவில்பட்டி-1) தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. மற்ற ரகங்களாகிய B-24, A. 2, N. P. 46-A, G.1, G.2 ஆகியவைகளையும் பயிரிடலாம். இவைகள் பெரும்பாலும் உலர்ந்த மிளகாய்க்குப் பயன்படுகின்றன. பச்சை மிளகாய்க்கு குண்டு மிளகாய் தினுசுகளும் குடமிளகாய் தினுசுகளும் பயன்படுகின்றன.

சாகுபடி குறிப்புகள்:

நாற்றங்கால்:

தக்காளிக்குச் செய்வதைப்போல் நாற்றங்கால் அமைத்து விதைகளை விதைத்து நாற்றுக்களை நடவு செய்யவும்.

நடவேண்டிய நிலத்தைப் பண்படுத்தலும் நடவு செய்தலும்:

நிலத்தை நன்ருகப் பண்படுத்தி தேவையான அளவு (10 டன்) தொழு உரமும் இரசாயன உரமும் போட்டு 2.7 மீட்டர் சதுரப் பாத்திகளை அமைக்கவும். பாத்திகளில் இருவழிகளிலும் 30 செ.மீ. இடைவெளியில் 40 முதல் 45 நாட்கள் வயதான நாற்றுக்களை நடவு செய்யவேண்டும்.

பின்செய் நேர்த்தியும், நீர்ப்பாய்ச்சுதலும்:-

அடிக்கடி களை எடுத்து நிலத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளவும். கடைசி முறை பூமியைக் கொத்தும்போது செடிகளுக்கு மண் அணைக்கவும். நான்கு முறை பூமியை கொத்திக் கொடுக்கவேண்டும். நட்டு 30 நாட்கள் கழித்து ஒரு முறையும், 60 நாட்கள்கழித்து ஒருமுறையும் பின்பு 90-வது நாளில் மூன்ருவது முறையாகவும் மேலுரம் இடவும். மழையைப் பொறுத்து வாரம் ஒரு முறை தண்ணீர் கட்டவும்.

பயிர் பாதுகாப்பு:

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை:-

நன்றாக வளர்ந்த பச்சை நிறமுள்ள காய்களைப் பறிக்கலாம் சராசரி ஏக்கருக்கு 14,000 கிலோ மகசூல் கிடைக்கும்.

மிளகாய் சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு வேண்டிய பொருட்கள்:

விதை: 500 கிராம்
தொழு உரம் அல்லது கம்போஸ்ட்:- 10 டன்
இரசாயன உரம்:

அம்மோனியம் சல்பேட்	:	250 கிலோ	(மேலுரம்)
சூபர் பாஸ்பேட்	:	60 கிலோ	அடி உரம்.
மியூரியேட் ஆப் பொட்டாஷ்	:	15 கிலோ	

பயிர் பாதுகாப்பு மருந்துகள் :

திமெட்	:	4 கிலோ	
சால்விரக்ஸ்	:	8 கிலோ	
ரோகார்	:	600 மி. லி.	
செவி மால்	;	750 கிராம்	
கரையும் செரசான்	:	1.5 கிலோ	(நாற்றங்காலுக்கும், நட்ட வயலுக்கும்.)
சினப் (Zineb)	:	1 கிலோ	

வெண்டை

தமிழ் நாட்டில் பரவலாக விரும்பிப் பயிரிடப்படும் காய்கறிகளில் வெண்டையும் ஒன்றாகும். ஆப்பிரிக்கா நாட்டிலிருந்துதான் மற்ற நாடுகளுக்கு வெண்டை அறிமுகம் செய்யப்பட்டது. இளங் காய்களைக் காய்கறியாக உபயோகிக்கலாம். அல்லது காய்களிலிருந்து சூப் செய்து சாப்பிடலாம். காய்களை அறுத்து வெயிலில் காயப்போட்டு வற்றலாக உபயோகப்படுத்தலாம். காய்கள் அறுவடை முடிந்த பிறகு செடிகளை ஊறவைத்து அதிலிருந்து நார் எடுக்கலாம். வெண்டைக்காயில் உயிர்ச்சத்து 'ஏ' மற்றும் 'பி'யும் புரதம் மற்றும் தாதுப்பொருட்களும், நிரம்ப உள்ளன.

தேவையான தட்பவெப்ப நிலையும் மண் சாரமும்:

சராசரி வெப்பமும் நீண்ட பகல் பொழுதுமுள்ள பருவமாக இருந்தால் நல்லது. பல வகை மண் தினுசுகளில் வெண்டையைப் பயிரிடலாம். இருப்பினும் நன்றாக உரமிட்ட மணல் கலந்த இரு பொறை (Loamy) பூமியாக இருந்தால் அதிக மகசூல் கிடைக்கும்.

பயிரிடும் பருவம்:- வருடம் முழுவதும் பயிரிடலாம் என்ற போதிலும் தை - மாசி முதல் ஆடி - ஆவணி வரை பயிரிட்டால் வெண்டையின் மகசூலை அதிகப்படுத்தலாம்.

பொறுக்கு ரகங்கள்:

பூசா சவானி:- குறுகிய கால (90 முதல் 100 நாட்கள்) ரகமாகும். காய்கள் பச்சையாகவும், மெல்லியதாகவும், 13முதல் 18 செ.மீ. நீளமுள்ளதாகவும், அதிகமாக இல்லாமலும், பச்சைப் பற்று அதிக அளவில் இல்லாததாகவும் இருக்கும். 'நரம்பு வெளுத்தல்' என்ற வைரஸ் நோய் இந்த ரகத்தை அதிகமாக தாக்காது. ஏக்கருக்கு 5,000 கிலோ மகசூல் கிடைக்கும்.

சிகப்பு வெண்டை:- காய்கள் மற்றும் செடிகள் யாவும் பூசா சவானி ரகத்தை ஒத்து இருக்கும். ஆனால் பச்சை நிறத்திற்குப் பதிலாக சிகப்பு நிறத்துடன் இருக்கும். இந்த ரகத்திலும் நரம்பு வெளுத்தல் நோய் அதிகமாக வராது. சராசரி ஏக்கருக்கு 4,000 கிலோ முதல் 5,000 கிலோ மகசூல் கிடைக்கும்.

சாகுபடி குறிப்புகள்:

நிலத்தைப் பண்படுத்தலும் விதைத்தலும்:

நிலத்தை மூன்று அல்லது நான்கு முறை உழுது ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் போட்டு 60 செ.மீ. இடைவெளியில் பார் பிடிக்கவும். பார்களின் பக்கவாட்டில் சிறிது கீழே தள்ளி இரசாயன உரங்களை (ஏக்கருக்கு 8 கிலோ தழைச் சத்தும், 20 கிலோ மணிச்சத்தும், 12 கிலோ சாம்பல் சத்தும் தரும் வகையில்) அடி உரமாக போட்டு மூடிவிடவும். பார்களின் பக்க வாட்டில் உரங்கள் போட்டதற்குச் சிறிது மேலாக 20 செ.மீ. இடைவெளியில் ஒரு இடத்திற்கு மூன்று அல்லது நான்கு விதைகள் வீதம் ஊன்றவும். உடனே நீர்ப்பாய்ச்சவும்.

பின் செய் நேர்த்தியும், நீர் பாய்ச்சுதலும்:-

விதைத்து பத்து நாட்கள் கழித்து நன்றாக வளர்ந்த நாற்றுக்

களை ஒரு இடத்திற்கு இரண்டுவீதம் விட்டு மற்றவைகளைக் களைத்து விடவும். இரண்டு அல்லது மூன்று முறை களை எடுத்து நிலத்தைச் சுத்தமாக வைக்கவும். வாரம் ஒரு முறை நீர்ப்பாய்ச்சவும். விதைத்து மூன்று வாரங்கள் கழித்து ஏக்கருக்கு 8 கிலோ தழைச் சத்து தரும் அளவுக்கு அம்மோனியம் சல்பேட்டை மேலுரமாகப் போட்டு செடிகளுக்கு மண் அணைக்கவும்.

அறுவடை :

மூன்று நாட்களுக்கு ஒரு முறை பிஞ்சுக் காய்களைப் பறிக்க வேண்டும். சராசரி ஏக்கருக்கு 4,000 கிலோ மகசூல் பெறலாம்.

வெண்டை பயிரிட ஒரு ஏக்கருக்குத் தேவையான பொருட்கள்:-

விதை: $2\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$ கிலோ
தொழு உரம் அல்லது கம்போஸ்ட் :- 10 டன்
இரசாயன உரம்:

அம்மோனியம் சல்பேட்	;	80 கிலோ
சூபர் பாஸ்பேட்	:	120 கிலோ
மியூரியேட் ஆப் பொட்டாஷ்	:	20 கிலோ

பயிர் பாதுகாப்பு மருந்துகள் : (ஒரு முறை உபயோகிக்க)

சால் விரக்ஸ்	:	8 கிலோ
செவி மால்	:	750 கிராம்
தயோடான்	:	500 மி.லி.
டிரைதியான்	:	800 மி.லி.
கார்பரைல்	:	600 கிராம்
கந்தகத்தூள்	.	10 கிலோ (சாம்பல் நோய் மற்றும் இலைப் பேன்களுக்கும்)

பரங்கி, பூசணி

தமிழ் நாட்டில் பயிரிடப்படும் கொடிக்காய்கறிகளில் பரங்கியும் (அரசாணி) பூசணியும் (சாம்பல் பூசணி) மிகவும் முக்கியமானது. அமெரிக்காவிலிருந்து பரங்கியும், ஜாவா அல்லது ஜப்பானிலிருந்து பூசணியும் மற்ற நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கலாம் என்று ஏடுகள் கூறுகின்றன. சேமித்து வைப்பதற்குச் சௌகரிய மாகவும், தூர இடங்களுக்கு விற்பனைக்குக் கொண்டுசெல்ல

ஏற்றதாகவும் இருப்பதால் இந்த இரு காய்களும் இந்தியாவில் அனைத்து மாவட்டங்களிலும் விரும்பிப் பயிரிடப்படுகிறது. கூரைகளின் மேலும், வேலிகளிலும் படரச்செய்வதற்கு ஏற்றதாக இருப்பதால் இவ்விரு காய்களும் வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்கு ஏற்றவையாகும். பரங்கியில் பிஞ்சு இலைகள், பூக்கள், பிஞ்சு மற்றும் முற்றிய காய்கள் ஆகியவற்றையெல்லாம் உபயோகப் படுத்தலாம். பூசணியில் பிஞ்சுக் காய்களை காய்கறியாகவும், முற்றிய காய்களை 'அல்வா' போன்ற இனிப்புப் பண்டங்கள் செய்யவும் உபயோகப்படுத்தலாம் இந்த இரு காய்களிலும் புரதச்சத்து, மாவுச் சத்து, உயிர்ச்சத்துக்கள் மற்றும் தாதுப் பொருட்களும் மிகுந்து உள்ளன. முக்கியமாகப் பரங்கியில் 'ஏ' உயிர்ச்சத்து அதிகமாக உள்ளது.

தேவையான தட்ப வெட்ப நிலையும் மண் சாரமும்:

சுமாரான வெப்பமுள்ள பருவமே சிறந்தது. சமவெளியில் மட்டுமல்லாமல், மலைப்பிரதேசத்திலும் (குறைந்த உயரத்தில்) பயிரிடலாம். 15° செ. கி. முதல் 30° செ. கி. வரை வெப்பமுள்ள பருவமே மிகவும் சிறந்தது. நல்ல வடிகால் வசதியுடைய செழிப்பான பூமியில் இந்த இரு காய்கறிகளும் நன்றாக வளர்ந்து அதிக மகசூல் கொடுக்கும்.

பருவம் :

தமிழ் நாட்டில் 'தைப்பட்டம்' மற்றும் 'ஆடிப்பட்டம்' ஆகிய இரு பருவங்களில் பயிரிடப்படுகிறது. தைப்பட்டத்திற்கு மார்கழி-தை மாதங்களிலும் ஆடிப்பட்டத்திற்கு ஆடி-ஆவணி மாதங்களிலும் விதைக்கலாம்.

பொறுக்கு ரகங்கள்:

கோ. 1. பரங்கி, கோ. 1. பூசணி ஆகிய, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இரு ரகங்கள் சிபாரிசு செய்யப்படுகிறது.

கோ. 1. பரங்கி : கொடிகள் ஊட்டத்துடன் செழிப்பாக வளரும். மொத்த பயிர்க்காலம் 175 நாட்களாகும். காய்கள் நடுத்தர அளவுடையதாகவும் குறைந்த விதையுடன் சதைப்பற்று நிறைந்ததாகவும் இருக்கும். ஏக்கருக்கு சராசரி 12,000 கிலோ

மகசூல் தரும். இந்த ரகம் பூச்சி, பூஞ்சாள நோய்களை ஓரளவு த்தாங்கும் தன்மையுடையது.

கோ.1. பூசணி: நன்றாக வளரும் கொடிகளைக் கொண்ட இந்த ரகத்தின் மொத்த வயது 150 நாட்கள். நடுத்தர அளவு மற்றும் குறைந்த விதையுடன் நிறைந்த சதைப்பற்றுமுள்ள காய்களைக் கொடுக்கும். சராசரி ஏக்கருக்கு 10,000 கிலோ மகசூல் கிடைக்கும். பூச்சிகளை, பூஞ்சாள நோய்களை ஓரளவு தாங்கும் தன்மையுடையது.

சாகுபடி முறைகள்:

நிலத்தைப் பண்படுத்தலும், விதைத்தலும்

நிலத்தை நன்றாக மூன்று அல்லது நான்கு தடவை உழுது 45 செ.மீ. நீள. அகல, ஆழமுடைய குழிகளை 3 முதல் 3.5 மீட்டர் (10முதல் 12அடி) இடைவெளியில் தோண்டவும். குழிக்கு 25கிலோ தொழு உரமும், 6-ம் நெம்பர் கலப்பு உரத்தில் 100 கிராமும் தோண்டிஎடுத்த மண்ணோடு கலந்து குழிகளை நிரப்பவும், குழிகளை சுற்றி ஒரு மீட்டர் வட்டத்தில் பாத்திகள் கட்டவும். குழிக்கு ஐந்து அல்லது ஆறு விதைகள் விதைத்து உடனே நீர்விடவும். விதைத்து ஒரு வாரங்கள் கழித்து, நன்றாக வளர்ந்த செடிகளில் குழிக்கு இரண்டு வீதம் விட்டு மற்றவைகளைக் களைத்து விடவும்.

பின்செய் நேர்த்தியும், நீர்ப்பாய்ச்சுதலும்

இரண்டு அல்லது மூன்று முறை களை எடுத்து நிலத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும். வாரம் ஒருமுறை நீர்ப்பாய்ச்சவும். செடிகள் பூக்கும் தருவாயில் குழிக்கு 10 கிலோ தொழு உரமிட்டு, மண்ணுடன் நன்றாகக் கொத்திவிட்டு நீர் பாய்ச்சவும்.

பயிர் பாதுகாப்பு:

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை;

தேவைக்கேற்றபடி பிஞ்சுக் காய்களாகவோ அல்லது முற்றிய காய்களாகவோ பறிக்கலாம். ஒரு ஏக்கருக்கு சராசரி 8,000 முதல் 10,000 கிலோ வரை மகசூல் தரும்.

ஒரு ஏக்கரில் பரங்கி, பூசணி பயிரிட வேண்டிய பொருட்கள்

விதை: *500 முதல் 800 கிராம்*

தொழு உரம்: *10 முதல் 12 டன்*

இரசாயன உரம்: *6-ம் நெம்பர் கலப்பு உரம் - 30 கிலோ*

பயிர் பாதுகாப்பு மருந்துகள்:

இமிடான்	:	10 கிலோ
டிப் டீ ரக்ஸ்	:	10 கிலோ
மாலதியான்	:	500 மி. லிட்டர்
டைத்தேன் Z. 78 or 'சினப்'	:	1 கிலோ
பென்லேட்	.	400 கிராம்

புடலை

நமது நாட்டிற்குச் சொந்தமான காய்கறிப் பயிர்களில் புடலையும் ஒன்று. தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், வட இந்தியப் பிரதேசங்களிலும் பயிரிடப்படுகிறது. புடலையில் உயிர்ச்சத்தும்களாகிய 'ஏ', 'பி', 'சி'யும் மற்றும் தாதுப் பொருட்களும் உள்ளன.

தேவையான தட்ப வெப்ப நிலையும், மண் சாரமும்

சுமாரான வெப்பமுள்ள சமவெளிப் பிரதேசங்களிலும் பயிரிடலாம். மலைப் பிரதேசங்களில் கூட வெப்பமும் குறைவாக உள்ள இடங்களில் பயிரிடலாம். பலவகைப்பட்ட மண்ணில் பயிரிடலாம், ஆனாலும் மணல் கலந்த வடிகால் வசதியுடைய இரு பொறை மண்ணுள்ள பூமியே மிகவும் சிறந்தது,

பருவம்:

தைப்பட்டம் மற்றும் ஆடிப்பட்டம் ஆகிய இரு பருவங்களில் தமிழ்நாட்டில் பயிரிடலாம்.

பொறுக்கு ரகங்கள்:

வரிகளுடன் பச்சைநிறமுடைய நீண்ட காய்கள் தரும் ரகம் அல்லது நீண்ட வெள்ளைநிறக் காய்கள் தரும் ரகமோ பயிர் செய்யலாம். கோடை காலத்திற்கு 'பண்ணிப் புடல்' (சிறு புடல்) என்ற ரகம் சிறந்தது.

சாகுபடி குறிப்புகள்:

நிலத்தைப் பண்படுத்தலும், விதைத்தலும்:

பரங்கி, பூசணிக்கு செய்வதைப்போல் நிலத்தைப் பண்படுத்தி குழிகளை 2 முதல் 2½ மீட்டர் இடைவெளியில் அமைத்து விதைகளை விதைக்கவும்.

பின்செய் நேர்த்தியும், நீர் பாய்ச்சுதலும்:

விதைத்து இருவாரங்கள் கழித்து மூன்று அல்லது நான்கு செடிகளை வைத்துக்கொண்டு மற்றவைகளைக் களைத்து விடவும். தேவைப்படும் பொழுது களை எடுத்து வாரம் ஒருமுறை நீர்ப் பாய்ச்சவும். ஒவ்வொரு பாத்தியிலும் மூங்கில் குச்சிகளை நட்டு அதன் வழியாக புடலைக் கொடிகளை பந்தலுக்கு படரச் செய்யவும். 6 முதல் 8 அடி உயரமுள்ள பந்தல்களை அமைப்பது நலம். சிறு கற்களைப் பிஞ்சுக் காய்களின் நுனியில் கட்டினால் காய்கள் நீள மாகவும், நேராகவும் வளரும். பந்தல்களின் மேல் பரவலாக கொடிகளைப் படரச்செய்யவும்.

பயிர் பாதுகாப்பு:

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை:

காய்கள் முற்றுவதற்கு முன்னால் பறிக்கவும். ஏக்கருக்கு 8,000 கிலோ மகசூல் கிடைக்கும்.

புடலையை ஒரு ஏக்கரில் பயிரிட தேவைப்படும் பொருட்கள்:

விதை: *500 கிராம்*

உரமும் பயிர் பாதுகாப்பு மருந்துகளும்:

பரங்கி, பூசணிக்கு வேண்டியதைப் போலவே.

பாகற்காய்

பாகற்காய் ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாக் கண்டத்திலிருந்து மற்ற தேசங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. இந்தியா முழுவதும் பயிரிட்டாலும் தமிழ்நாட்டில் மிகவும் விரும்பிய காய்கறியாகப் பயிரிடப்படுகிறது. பாகற்காயில் அதிக அளவு உணவுச் சத்துக்கள் உள்ளன. முக்கியமாக புரதச்சத்து, இரும்பு மற்றும் இதர தாதுப்பொருட்கள், 'ஏ' மற்றும் 'சி' உயிர்ச்சத்துக்கள் முதலியவை அதிக அவவில் உள்ளன. காய்கறியாக மட்டுமல்லாமல். பாகற்காய் ஊறுகாயாகவும், வற்றலாகவும் உபயோகப்படுத்தலாம். உணவுச்சத்துகள் மட்டுமல்லாமல் பல மருத்துவப்பயன்கள் உடையதாகவும் இருக்கின்றது. பெரிய காய்களை விடச் சிறிய காய்களில் உணவுச் சத்துக்கள் அதிகமாக உள்ளன என்று கூறப்படுகின்றது.

தேவையான தட்ப வெப்ப நிலையும் மண்சாரமும்:

சுமாரான அளவு வெப்பமும் உள்ள இடங்களில் பாகற்காய் பயிரிடலாம். இருந்தாலும் பல வகைப்பட்ட சீதோஷ்ண நிலைகளிலும் வடிகால் வசதியுடைய எல்லா வகை மண்ணிலும் பயிரிடலாம்.

பருவம்:

பரங்கி, பூசணியபைப் போல் தைப்பட்டம் மற்றும் ஆடிப் பட்டம் ஆகிய இரு பட்டங்களிலும் புயிரிடலாம்.

பொறுக்கு ரகங்கள்:

"கோயமுத்தூர் நீளம்" என்ற நீள வெள்ளைக் காய்களைக் கொண்ட ரகமும் மற்றும் பச்சை நிற நீளமான காய்களையுடைய ரகமும் சிபாரிசு செய்யப்படுகிறது.

சாகுபடி குறிப்புக்கள்:-

புடலைக்குச் செய்வதைப் போலவே. ஆனல், செடிக்குச் செடி இடைவெளி மட்டும் 180 செ.மீ. இருக்கவேண்டும்.

மற்றும் பந்தல் அமைக்கவேண்டிய அவசியமில்லை. கொடிகளை நிலத்திலும், காய்ந்த மரக்கிளைகளிலும் மற்றும் மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகளிலும் படர விடலாம்.

பயிர் பாதுகாப்பு:

தனி அட்டவணையைப் பார்க்க

அறுவடை:

நன்கு வளர்ச்சி பெற்ற பிஞ்சு காய்களை வாரம் ஒருமுறை பறிக்கலாம். சராசரி ஏக்கருக்கு 4000 கிலோ மகசூல் கிடைக்கும்.

ஒரு ஏக்கருக்கு பாகற்காய் பயிரிடத் தேவைப்படும் பொருட்கள்:-

விதை: 800 கிராம் முதல் 1,200 கிராம் வரை

உரம்: 10 முதல் 12 டன் தொழு உரம்.

பயிர் பாதுகாப்பு மருந்துகள்:

புடலைக்குச் சொன்னதைப் போலவே.

பீர்க்கன்

கொடிக்காய் வகைகளைச் சேர்ந்த காய்கறிகளில் பீர்க்கனும் ஒன்று. நன்றாக சமைக்கப்பட்ட காய்கள் உண்பதற்கு மிகவும் ருசியாகவும், எளிதில் சாப்பிடக்கூடியதாகவும் இருக்கும். பீர்க்கனில் உயிர்ச்சத்து 'ஏ' மற்றும் 'சி' யும் மற்றும் இரும்புச்சத்தும் அதிகமாக உள்ளன. மரங்களிலும், கூரைகளின் மேலும் படர விட்டு பயிர் செய்ய ஏதுவாக உள்ளதால் வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்கு ஏற்ற ஒரு காய்கறி.

தேவையான தட்பவெட்ப நிலையும், மண் சாரமும்:-

வடிகால் வசதியுள்ள எல்லா வகை பூமிகளிலும் பயிரிடலாம். சுமாரான வெப்பம் உள்ள சீதோஷ்ண நிலை போதுமானது.

பருவம்:

பரங்கியைப் போல் தைப்பட்டம், ஆடிப்பட்டம் ஆகிய இரு பருவங்களிலும் பயிரிடலாம்.

பொறுக்கு ரகங்கள்:

கோவை ரகமான "அதி நீள உயர் ரக பீர்க்கன்" என்ற ரகம் தமிழ்நாட்டுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது. பாரத விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட "பூசா நஸ்தார்" என்ற ரகமும் பயிரிடலாம். இந்த ரகம் இளம்பச்சை நிறமுள்ள நடுத்தர வயதுள்ள ரகமாகும். இது கோடைப் பருவத்திற்கு

மிகவும் ஏற்றது. காய்கள் 60 முதல் 70 செ.மீ. நீளமுள்ள பச்சை நிறமுள்ளதாகவும் இருக்கும்.

சாகுபடி குறிப்புகள்:

புடலைக்குச் செய்வதைப் போலவே.

பயிர் பாதுகாப்பு:-

தனி அட்டவணையைப் பார்க்க

அறுவடை:

பிஞ்சுக்காய்களை வாரம் ஒருமுறை பறிக்கவும். ஏக்கருக்கு சராசரி 4000 கிலோ மகசூல் கிடைக்கும்.

பீர்க்கன் பயிர் செய்ய ஒரு ஏக்கருக்கு வேண்டிய பொருட்கள்:

விதை: 800 கிராம் முதல் 1.2 கிலோ வரை

பயிர் பாதுகாப்பு மருந்துகள்:

புடலைக்குச் சொன்னதைப் போல்.

உரங்கள்: புடலைக்கு சொன்னதைப் போல்.

முள்ளங்கி

தமிழ் நாட்டில் பயிராகும் வேர்க் காய்கறிகளில் முள்ளங்கி முக்கியமானது. கிழங்குகளில் உயிர்ச்சத்து 'சி' உள்ளது. முள்ளங்கி இலைகளில் தாதுப்பொருட்களும், உயிர்ச்சத்து 'ஏ' மற்றும் 'சி' அதிக அளவில் உள்ளதால் கீரையாக உபயோகிக்கலாம். பயிர் செய்ய எளிதாகவும், குறுகியகாலப் பயிராகவும் இருப்பதால் முள்ளங்கி வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்கு மிகவும் ஏற்றது. முள்ளங்கி கிழங்குகளைப் பொறியலாகவும், கறியாகவும் அல்லது அப்படியே பச்சையாக சிறிது உப்புத் தூவி உபயோகிக்கலாம்.

தேவையான தட்ப வெட்ப நிலையும், மண்சாரமும் :

சராசரி 10° செ.கி. முதல் 16° செ.கி. வரை குறைந்த அளவு வெப்பமுள்ள குளிர்காலமாக இருந்தால், முள்ளங்கி நன்றாக வளர்ந்து, நல்ல மணமுள்ள பெரிய கிழங்குகளும் கொடுக்கும். வேர்க் காய்கறியாக இருப்பதால் செழிப்பான மணல் கலந்த வடிகால் வசதியுடைய நிலம் மிகவும் அவசியம்.

பருவம்:

வருடம் முழுவதும் பயிரிடலாம். இருப்பினும் சமவெளியில் புரட்டாசி முதல் மார்கழி முடியவும், மலைப்பிரதேசங்களில் மாசி - பங்குனி முதல் ஆனி - ஆடி வரையும் பயிரிட்டால் அதிக மகசூல் கிடைக்கும்.

பொறுக்கு ரகங்கள்:

வெள்ளை முள்ளங்கி : சமவெளிக்கேற்ற ஒரு ரகம். இதனுடைய கிழங்குகள் வெள்ளை நிறமாகவும், 15 முதல் 20செ.மீ நீளம், 7 செ. மீ. அகலமுள்ளதாகவும் இருக்கும். இதனுடைய வயது 45 நாட்களேயாகும்.

வெள்ளை ஐசிகிள்: மலைப்பிரதேசத்திற்கு ஏற்ற ஒரு ரகம். கிழங்குகள் நேராகவும், வெள்ளை நிறத்துடனும் இருக்கும். 30 நாட்களே வயதுடைய ஒரு குறுகியகால ரகம்.

சிகப்பு, உருண்டை : மிகவும் குறுகிய வயதுடைய (25நாட்கள்) ஒரு ரகம். கிழங்குகள் சிகப்பு நிறமுள்ளதாகவும் நுனிமட்டும் சிறிது வெள்ளை நிறத்துடனும் இருக்கும். சதை வெள்ளை நிறமாக இருக்கும். இதுவும் மலைப்பிரதேசத்திற்கு ஏற்ற ஒரு ரகம்.

சாகுபடி குறிப்புகள்:-

நிலத்தைப் பண்படுத்தலும், விதைத்தலும்:

நான்கு அல்லது ஐந்து முறை நிலத்தை நன்றாக உழுது பண்படுத்தி, தொழு உரம் அல்லது கம்போஸ்ட் எருவும் இரசாயனஉரமுமிட்டு, 45 செ.மீ. இடைவெளியில் பார்கள் பிடிக்கவும். பார்களின் பக்கவாட்டில் 25 செ.மீ. இடைவெளியில் இடத்திற்கு 4 அல்லது 5 விதைகள் வீதம் விதைக்கவும்.

பின்செய் நேர்த்தியும். நீர்ப் பாய்ச்சுதலும்:

விதைத்து 10 நாட்கள் கழித்து இடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு செடிகளை விட்டு மற்றவைகளைக் கலைத்து விடவும். ஒன்று அல்லது இரண்டு முறை களை எடுக்கவும். இரசாயன உரமிட்டு செடிகளுக்கு மண் அணைக்கவும். வாரம் ஒருமுறை நீர்ப் பாய்ச்சவும்.

பயிர் பாதுகாப்பு:-

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை:

ரகங்களின் வயதைப் பொறுத்து விதைத்து 25 முதல் 40

நாட்கள் கழித்து கிழங்குகளை எடுக்கலாம். ஏக்கருக்கு 8000 கிலோ கிழங்கு மகசூல் கிடைக்கும்.

முள்ளங்கி பயிரிட ஒரு ஏக்கருக்கு தேவையான பொருட்கள்:

தொழு உரம்: 10 டன்கள்

விதை : 4 முதல் 5 கிலோ வரை

இரசாயன உரம்:

அம்மோனியம் சல்பேட் : 240 கிலோ
சூபர் பாஸ்பேட் : 150 கிலோ
மியூரியேட் ஆப் பொட்டாஷ் : 80 கிலோ

பயிர் பாதுகாப்பு மருந்துகள் :-

மாலத்தியான் 50% : 500 மி.லி.
டைத்தேன் Z 78
அல்லது சினப் : 400 லிட்டர்

கேரட்

நமது நாட்டில் பஞ்சாப் மற்றும் காஷ்மீர் மலைப்பிரதேசங்களில் முதன் முதலில் பயிரிடப்பட்டு மற்ற நாடுகளுக்கு அறிமுகம் செய்யப்பட்ட ஒரு காய்கறி கேரட். உலகத்தில் பல இடங்களில் பயிரிடப்படுகிறது. தென் இந்தியாவில் கேரட் மலைப் பிரதேசங்களில் மட்டுமே முக்கியமாக பயிரிடப்படுகிறது. கிழங்குகளில் உயிர்ச்சத்து 'ஏ' மற்றும் இரும்புச்சத்து அதிகமாக உள்ளது. அத்துடன் உயிர்ச்சத்து 'பி' யும், 'சி' யும் மற்றும் சர்க்கரைச் சத்தும் அதிகமாக உள்ளது. பல்வேறு வகைகளில் சமையலுக்குப் பயன்படுத்தலாம். மற்றும் இனிப்புப் பண்டங்கள் ஊறுகாய் ஆகியனவும் செய்யலாம். கேரட் பல மருத்துவப் பயன்கள் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

தேவையான தட்ப வெப்ப நிலையும். மண் சாரமும்:

குளிர்ப் பிரதேசம் மிகவும் சிறந்தது. அதிக வெப்பம் செடி வளர்ச்சியைப் பாதித்து கிழங்குகளின் அளவையும் பருமனையும்

குறைத்து மகசூலைக் குறைக்கும். 65°F முதல் 75°F அளவு வெப்பம் உள்ள பகுதிகளில் நன்றாக வளரும். மணல் கலந்த ஆழமான இருபொறை மண் கேரட் பயிரிட ஏற்றது. அமிலச்சத்து அதிகம் உள்ள நிலம் ஏற்றதல்ல.

பயிரிடும் பருவம்:

சமவெளியில் ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரையிலும், மலைப் பிரதேசங்களுக்கு மார்ச் முதல் ஜூலை வரையிலும் உள்ள பருவங்கள் கேரட் பயிரிட ஏற்றதாகும். சில ஐரோப்பிய ரகங்களை செப்டம்பர் மாத மத்தியிலிருந்து நவம்பர் மாத இறுதிவரை விதைக்கலாம்.

பொறுக்கு ரகங்கள்

பூசா கேஸர், நன்டிஸ் மற்றும் சான்டனே போன்ற ரகங்கள் பாரத விவசாய ஆராய்ச்சிக் கழகத்தால் சிபாரிசு செய்யப்படுகின்றன.

பூசா கேசர்: வட இந்தியாவில் பயிரிடப்படும் மிவப்புக் கேரட் வகைமளில் சிறந்த ரகமாகும். குறுகிய கிளைகளும், குறைந்த அளவு இலைகளும் உடைய ரகம்.

நன்டிஸ் : ஆரஞ்சு வர்ணமுடைய நீண்ட கிழங்குகளுடைய ரகம். கிழங்குகள் சிலிண்டர் வடிவமாமவும், இனிப்பாகவும், மிருதுவான சதைப்பற்றைக் கொண்டதாகவும் இருக்கும். ரகத்தின் மொத்த வயது 120 நாட்களாகும்.

சான்டனே (Chantaney): அதிக அளவு மகசூலைப் பயிர்க் காலமாகிய 120 நாட்களில் தரவல்ல ஒரு ரகம். சிகப்புக் கலந்த ஆரஞ்சு நிறமுள்ள, மிருதுவான, இனிப்பான கிழங்குகளுடைய ரகம்

சாகுடி குறிப்புகள்

நிலத்தைப் பண்படுத்தலும் விதைத்தலும் :

நிலத்தை நன்றாக 3 அல்லது 4 முறை உழுது பண்படுத்தி, வேண்டிய அளவுக்கு பாத்திகளாகப் பிடிக்கவும். அல்லது 45 செ. மீ. இடைவெளியில் பார்கள் பிடிக்கவும். இதற்கு முன்னால் ஏக்கருக்கு 12 டன் வீதம் தொழு உரம் போட்டு அதற்குமேல் தேவைப்பட்டால் மண்ணின் தரத்தையும், செழிப்பையும் அடிப்

படையாக வைத்துத் தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து தரும் இரசாயன உரங்களை இடலாம். விதைகளை மண்ணுடன் கலந்து பாத்திகளில் தூவவும். அல்லது பார்களில் 9 செ. மீ. இடைவெளியில் விதைக்கவும்.

பின்செய் நேர்த்தியும் நீர்ப்பாய்ச்சுதலும் :

அடிக்கடி களை எடுதது நிலத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கிழங்குகள் அப்போதுதான் நன்ருகப் பெரிதாக வளரும். ஒன்று அல்லது இரண்டுமுறை செடிகளுக்கு மண் அணைக்கவும். வாரம் ஒருமுறை நீர்ப்பாய்ச்சவும். கிழங்கு எடுப்பதற்கு முன்னுல் குறைந்த அளவு நீர்ப்பாய்ச்சவும்.

பயிர்ப்பாதுகாப்பு :

தனி அட்டவணையைப் பார்க்க

அறுவடை :

கிழங்குகள் $2\frac{1}{2}$ முதல் 3 செ. செ. மீ. குறுக்களவு அடைந்தவுடன் அறுவடை செய்யலாம். ஏக்கருக்கு 8,000 முதல் 12,000 கிலோவரை மகசூல் கிடைக்கும்.

கேரட் பயிரிட ஏக்கருக்கு வேண்டிய பொருடகள் :

விதை	:	2 முதல் $2\frac{1}{2}$ கிலோ
தொழு உரம்	:	12 டன்
இரசாயன உரம்	:	நிலத்தின் தன்மையைப் பொறுத்தது

பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் : (ஒருமுறை உபயோகிக்க)

அக்ரசான் அல்லது செரசான் தூள்	:	6 கிராம்
கார்போரில் 10 சதத்தூள்	:	10 கிலோ
மாலதியான்	:	600 மி. லி.
டைத்தேன் Z-78 அல்லது சினப்	:	400 கிராம்

பீட்ரூட்

மற்ற நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட காய்கறிகளில் பீட்ரூட்டும் ஒன்று. இதில் உயிர்ச்சத்து 'சி', தாதுப்பொருட்கள் மற்றும் புரதச்சத்துக்கள் போன்றவை அதிகமாக உள்ளன. கிழங்குகளை பச்சையாகவோ அல்லது சமைத்தோ சாப்பிடலாம்.

தேவையான தட்பவெட்ப நிலையும் மண் சாரமும் :

குளிர்காலப் பயிராக இருந்தாலும் சுமாரான வெப்பமுள்ள பிரதேசங்களிலும் பயிரிடலாம். குளிர் பிரதேசங்களில் கிழங்கு களில் சர்க்கரைச்சத்து அதிகமாக இருக்கும். கிழங்கு நன்றாக முற்றி அறுவடைக்குத் தயாராவது வெப்ப நிலையைப் பொறுத்து மாறுபடும். மணல் கலந்த பூமி சிறந்ததாகும். அதிக அளவு அமிலச்சத்து உள்ள நிலம் பீட்ரூட் பயிர் செய்வதற்கு ஏற்றதல்ல.

பயிரிடும் பருவம் :

கேரட்டுக்குச் சொன்னதைப்போல்

பொறுக்கு ரகங்கள் :

'கிரிம்சன் குளோப்' (Crimson Globe) மற்றும் 'டெட்ராயிட் கருஞ்சிமப்பு' (Detriot Dark Red) போன்ற ரகங்கள் சிறந்தவை.

நிலத்தைப் பண்படுத்தலும், விதைத்தலும் :

கேரட்டுக்குச் செய்வதைப்போல் ஏக்கருக்கு 25 முதல் 30 கிலோ தழைச்சத்தும், 40 முதல் 50 கிலோ மணிச்சத்தும், 25 முதல் 30 கிலோ சாம்பல்சத்தும் தரவல்ல இரசாயன உரங்கள் சிபாரிசு செய்யப்படுகிறது. மணற்பாங்கான பூமிகளுக்கு, தழைச்சத்தும், சாம்பல்சத்தும் சிறிது அதிகப்படுத்தலாம்.

பின்செய் நேர்த்தியும் நீர்பாய்ச்சுதலும் :

கேரட்டுக்கு செய்வதைப்போலவே; ஒரு விதையிலிருந்து பல நாற்றுக்கள் முளைப்பதால் நாற்றுக்களைக் கலைத்துவிடுவது மிகவும் அவசியம்.

பயிர்ப் பாதுகாப்பு :

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை :

நன்றாக வளர்ச்சி அடைந்த கிழங்குகளை அறுவடை செய்யவும். எரு ஏக்கருக்கு 8,000 முதல் 10,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

பீட்ரூட் பயிரிட ஒரு ஏக்கருக்கு வேண்டிய பொருட்கள்

விதை : *2 கிலோ முதல் 2.5 கிலோ.*

உரங்கள் :

அம்மோனியம் சல்பேட்	:	*125 முதல் 150 கிலோ*
சூபர் பாஸ்பேட்	:	*250 முதல் 300 கிலோ*
மியூரியேட் ஆப் பொட்டாஷ்	:	*50 முதல் 60 கிலோ*

பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் : *(ஒருமுறை உபயோகிக்க)*

கார்போரில் 10 சதத்தூள்	:	*10 கிலோ*
மாலதியான்	:	*500 மி. லிட்டர்*
டைத்தேன் Z 78 அல்லது சினப்	:	*400 கிராம்*

டர்னிப்

டர்னிப் ஒரு அயல்நாட்டுக் காய்கறி. கிழங்குகளின் உயிர்ச் சத்து 'சி' மற்றும் தாதுப்பொருட்கள் அதிகமாக உள்ளன. கிழங்குகளை ஊறுகாய்க்கும் மற்ற காய்கறிகளுடன் சமையல் செய்யவும் அல்லது அப்படியே பச்சையாக உபயோகிக்கவும் செய்யலாம். டர்னிப் செடியின் இலைகளில் உயிர்ச்சத்து 'ஏ' மற்றும் தாதுப் பொருட்களும் இருப்பதால் கீரையாக உபயோகிக்க மிகவும் சிறந்தது. ஆகையால் கிழங்குகளுடன் சேர்த்து இலைகளையும் சமையலுக்கு உபயோகப்படுத்தலாம்.

தேவையான தட்பவெப்ப நிலையும் மண் சாரமும் :

குளிர்ப் பிரதேசங்களில் மட்டுமே சாகுபடி செய்யலாம். மலைப்பிரதேசங்களில் பயிரிட்டால் நன்குக வளர்ச்சி அடைந்து தரம்மிக்க கிழங்குகளை அறுவடை செய்யலாம். மணற்பாங்கான நிலம் மிகவும் சிறந்தது.

பயிரிடும் பருவம் :

கேரட்டுக்குச் சொன்னது போலவே.

பொறுக்கு ரகங்கள் :

'பூசா காஞ்சன்' (Pusa-Kanchan), 'பர்பிள் டாப்' (Purple Top), 'வெள்ளைக் குளோப்' (White Globe), 'ஸ்னோ பால்' (Snow Ball), 'கோல்டன் பால்' (Golden ball) மற்றும் 'ஏர்லிமிலான்' (Early Milan) போன்ற ரகங்கள் சிறந்தவை.

சாகுபடிக் குறிப்புகள்

நிலத்தைப் பண்படுத்தலும் விதைத்தலும் :

கேரட்டுக்குச் செய்வதைப் போலவே. 30 முதல்45 செ. மீ. இடைவெளியில் பார்பிடித்து, பார்களில் 10 முதல் 15 செ. மீ. இடைவெளி கொடுத்து விதைகளை ஊன்றவும். ஏக்கருக்கு 12 டன் தொழு உரமிட்டு 30 கிலோ தழைச்சத்து, 20 கிலோ மணிச்சத்து மற்றும் 20 கிலோ சாம்பல்சத்து தரும் வகையில் இரசாயண உரமிடவும்.

பின்செய் நேர்த்தியும் நீர்ப்பாய்ச்சுதலும் :

கேரட்டுக்குச் செய்வதைப் போலவே.

பயிர்ப் பாதுகாப்பு :

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை :

கிழங்குகளை 5 முதல் 8 செ. மீ. குறுக்களவு வளர்ச்சி பெற்ற பிறகு அறுவடை செய்யவும். ஏக்கருக்கு ரகங்களைப் பொறுத்து 8000 கிலோ முதல் 16000 கிலோவரை மகசூல் பெறலாம்.

டர்னிப் பயிரிட ஒரு ஏக்கருக்கு வேண்டிய பொருட்கள் :

விதை : 1.2 முதல் 1.6 கிலோ.

உரம் :	தொழு உரம்	— 12 டன்
	அம்மோனியப் சல்பேட்	— 150 கிலோ
	சூபர் பாஸ்போட்	— 120 கிலோ
	மியூரியேட் ஆப் பொட்டாஷ்	— 40 கிலோ

பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் : (ஒருமுறை உபயோகிக்க)

10 சத கார்போரில் தூள்	— 10 கிலோ
மாலதியான்	— 600 மி. லிட்டர்



கோ. 1 தக்காளி

கோ. 1 தண்டுக்கீரை

பீர்க்கன்காய்



கோ. 1 சாம்பல் பூசணி

← கத்தரி ஊதா நிறம்

புடலை பச்சை நிறம் →

மிளகாய் கே. 1

பாகல் - கோயமுத்தூர் நீளம்

வெள்ளை கத்தரி

வெண்டை - பூசா சவானி

தண்டுக்கீரை

கீரை வகைகளைச் சேர்ந்த ஒரு காய்கறி. இதில் உயிர்ச் சத்து 'ஏ' 'சி' புரதச் சத்துக்கள் மற்றும் இரும்புச்சத்து: சுண்ணும்புச்சத்து போன்ற தாதுப்பொருட்கள் அதிகமாக உள்ளன. சமையல் செய்வதற்குச் சுலபமாகவும் மிகுந்த சுவையும்பெற்ற ஒரு காய்வகை கீரை.

தேவையான தட்பவெட்ப நிலையும் மண்சாரமும் :

வீட்டுக்காய்கறித் தோட்டத்திற்கு ஏற்ற ஒரு காய்கறியான தினல் எல்லா இடங்களிலும் பயிரிடலாம். செழிப்பாகவுள்ள எல்லாவகை நிலத்திலும் பயிரிடலாம். வீடுக் காய்கறித் தோட்டத்தில் காலி இடங்களில் மட்டுமல்லாமல், மண் தொட்டிகள் காலி மரப்பெட்டிகள் போன்றவற்றிலும் பயிரிடலாம்.

பயிரிடும் பருவம் :

எல்லாப் பருவங்களிலும் பயிரிடலாம். இருந்தாலும் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் விதைத்தால் அதிக மகசூல் அடையலாம்.

பொறுக்கு ரகங்கள் :

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 'கோ 1' தண்டுக்கீரை சிபாரிசு செய்யப்படுகிறது. இந்த ரகத்தை விதைத்து 3 வாரங்களில் முளைக்கீரையாகவும் மற்றும் விதைத்து எட்டு வாரங்கள் கழித்துத் தண்டுக்கீரையாக வும் உபயோகிக்கலாம். ஹெக்டேருக்கு 8000 கிலோ கீரை மகசூல் கிடைக்கும். 'சோட்டி சாலய்' (Choti Chaulai) 'பாரி சாலய்' (Bare Chaulai) போன்ற ரகங்களும் சிபாரிசு செய்யப்படுகிறது.

சாகுபடிக் குறிப்புகு

நிலத்தைப் பண்படுத்தலும், விதைத்தலும் :

நிலத்தை நன்கு உழுது, தொழு உரமும், இரசாயன உரமும் போட்டு $3 \times 2\frac{1}{2}$ மீட்டர் அளவில் பாத்திகளோ (முளைக் கீரைக்கு) அல்லது 45 செ. மீ. இடைவெளியில் பார்களோ (தண்டுக்கீரைக்கு) பிடிக்கவும். விதைகளை 10 மடங்கு மணலுடன் கலந்து விதைக்கவும். முளைக்கீரையாக எடுக்கும் நாற்றுக்களை 15 முதல் 20 செ. மீ. இடைவெளியில் தண்டுக்கீரைக்கு நடவு செய்யலாம்.

பின்செய் நேர்த்தியும், நீர்ப்பாய்ச்சுதலும் :

விதைத்த உடனேயும் பின்பு வாரம் ஒருமுறையும் நீர்ப் பாய்ச்சவும். ஒன்று அல்லது இரண்டு முறை களை எடுக்கவும். மூன்று வாரங்கள் கழித்து 15 முதல் 20 செ.மீ. இடைவெளிவிட்டு நாற்றுக்களைக் கலைத்து, கலைத்த நாற்றுக்களை முளைக் கீரையாக வும் மற்றவைகளைத் தண்டுக் கீரைக்கும் விடலாம்.

பயிர்ப் பாதுகாப்பு :

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை :

விதைத்த மூன்று வாரங்களில் முளைக்கீரையாகவும். எட்டு வாரங்களில் தண்டுக் கீரையாகவும் அறுவடை செய்யவும். ஏக்க ருக்கு 6000 முதல் 7500 கிலோவரை மகசூல் அடையலாம்.

தண்டுக்கீரை பயிரிட ஒரு ஏக்கருக்கு வேண்டிய பொருட்கள் :

விதை	:	400 கிராம்.	
உரங்கள்	:	தொழு உரம்	10 டன்
		அம்மோனியம் சல்பேட்	20 கிலோ
		சூபர் பாஸ்பேட்	50 கிலோ
		மியூரியேட் ஆப் பொட்டாஷ்	25 கிலோ

பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் : (ஒருமுறை உபயோகிக்க)

மாலதியான் 6000 மி. லிட்கிர்.

முட்டைக்கோஸ்

குளிர் கால காய்கறிகளில் முட்டைக்கோஸ் மிகவும் முக்கிய மானது. ஐரோப்பா மற்றும் மத்தியதரைக் கடலோரங்களி லிருந்து இந்தியாவிக்கு அறிமுகம் செய்யப்பட்டது. முட்டைக் கோசை ஊறுகாயாகவும், வற்றலாகவும், பச்சையாகவும், வேக வைத்தும் உபயோகப்படுத்தலாம். இதில் உயிர்ச்சத்துக்கள் 'ஏ', 'சி' மற்றும் தாதுப்பொருட்கள் போன்றவை அதிகமாக உள்ளன.

தேவையான தட்ப வெப்ப நிலையும் மண் சாரமும்

ஈரப்பசையுடைய குளிர்காலப் பருவமே ஏற்றது. இந்தியா வில் சமவெளியில் குளிர்காலப் பயிராகவே பயிர்செய்யப்படுகிறது.

பலவகை மண்ணில் பயிரிடப்பட்ட போதிலும், மணல் கலந்த இரு பொறை பூமியே மிகவும் சிறந்தது. 5.5 முதல் 6.5 வரை காரை காடித் தன்மை (pH) உடைய நிலமே முட்டைக் கோஸ் பயிரிட உகந்தது.

பயிரிடும் பருவம்

சமவெளியில் ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் குறுகிய காலப் பயிரையும், செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் நீண்ட காலப் பயிரையும் விதைக்கலாம். மலைப் பிரதேசங்களில் மார்ச் முதல் ஜூன் வரை விதைக்கலாம்.

பொறுக்கு ரகங்கள் :-

முந்திய ரகங்கள்

கோல்டன் ஏக்கர் (Golden Acre)
ஏர்லி டிரம் ஹெட் (Early Drum Head)
பிரைட் ஆப் இந்தியா (Pride of India)
கோபன்ஹேகன் மார்க்கட் (Copenhagen Market)
மம்மூத் ராக் ரெட் (Mammoth Rock Red)

பிந்திய ரகங்கள்

பூசா டிரம் ஹெட் (Pusa Drum Head)
ஜெர்ஸி வேக் பீல்டு (Jersy Wake Field)
சீப்டென் (Chieftain)

சாகுபடிகுறிப்புகள் :-

நிலத்தைப் பண்படுத்தலும் நடுதலும்

தக்காளிக்குச் செய்வதைப் போல் மூன்று நீண்ட உயரப் பாத்திகள் அமைத்து விதைகளை 10 செ. மீ. இடைவெளியில் பரவலாக விதைக்கவும். மணலால் மூடி பூவாளியால் நீர் ஊற்றவும். பி. எச். சி. 10 சத தூளை பாத்திகளில் ஓரங்களில் போடவும். விதைத்து 20 நாட்கள் கழித்து 50 சத டி. டி. டீ. கரையும் மருந்தை (200கிராம மருந்ததை 100லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவும். நடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால் அம்மோனியம் சல்பேட் கரைத்த நீரை விட்டால் நாற்றுக்கள் நன்ருக வளர்ச்சி பெறும்.

நடப்போகும் நிலத்தை நன்கு உழுது தொழு உரம் மற்றும் இரசாயன இரமிட்டு 75 செ. மீ. இடைவெளியில் பார் பிடிக்கவும். பார்களில் 10 சத பி. எச். சி. தூள் அல்லது டைல்ரின் தூள் தூவி

நீர்பாய்ச்சி பின்பு 60 செ.மீ. இடைவெளியில் நாற்றுக்களை இடத்திற்கு ஒன்றாக நடவும். விதைத்து நான்கு வாரங்கள் கழித்து நாற்றுக்களை நடவு செய்யவும்.

பின்செய் நேர்த்தியும் நீர்ப்பாய்ச்சுதலும்

வேண்டும்போது களை எடுத்து நட்டு 35 நாட்கள் கழித்து ஒருமுறை செடிகளுக்கு மண் அணைக்கவும். வாரம் ஒரு முறை நீர்ப்பாய்ச்சவும். மண் அணைப்பதற்கு முன்னால் அம்மோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும்.

பயிர் பாதுகாப்பு

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை

முட்டைகோஸ் நன்றாக வளர்ச்சி பெற்று முற்றாமல் இருக்கும் தருவாயில் அறுவடை செய்யவும். ஏக்கருக்கு 8 முதல் 14 டன்கள் வரை மகசூல் கிடைக்கும்.

முட்டைக்கோஸ் பயிரிட ஒரு ஏக்கருக்கு வேண்டிய பொருட்கள்:

விதை :-	200 கிராம்	
உரம் :-	தொழு உரம்	— 10 டன்
	அம்மோனியம் சல்பேட்	— 250 கிலோ
	சூப்பர் பாஸ்பேட்	— 110 கிலோ
	மியூரியேட் ஆப் பொட்டாஷ்	— 30 கிலோ

பயிர் பாதுகாப்பு மருந்துகள் :- (ஒரு முறை உபயோகிக்க)

50 சத கரையும் மாலதியான்	— 600 மி. லிட்டர்
செரசான் தூள்	— 500 மி. கிராம்
மெர்குரிக் குளோரைடு	— 1 முதல் 2 கிலோ (வயல்களில் ஊற்ற)
டைதேன் Z-78	— 800 கிராம்

காலிபிளவர்

ஐரோப்பிய வகை காய்களில் முக்கியமானதும் மற்றும் இந்தியாவில் எல்லா மாவட்டங்களிலும் பயிரிடப்பட்டு வரும் குளிர் கால காய்கறி காலிபிளவர். தமிழ்நாட்டில் மலைப்பிரதேசத்தில்

அதிகமாக பயிர்செய்யப் படுகிறது. சமவெளியில் குளிர்காலங் களில் பயிர்செய்யப் படுகிறது. செடியில் உள்ள இளம் பூ காம்பு கள் சாப்பிடுவதற்கு உபயோகப்படுத்தப் படுகிறது. சூப், ஊறு காய்கள் மற்றும் கறிவகைகள் முதலியவற்றை இதிலிருந்து செய்ய லாம். காலிபிளவரில் புரதச் சத்து, மற்றும் பல உயிர்ச்சத்துக் களும அதிக அளவில் உள்ளன.

தேவையான தட்பவெப்ப நிலையும், மண்சாரமும்

ஈரக்கசிவுள்ள குளிர்காலம் காலிபிளவர் பயிரிடச் சிறந்தது. 15° செ. மீ. முதல் 24° செ. மீ. வரை வெப்பம் உள்ள சீதோஷ்ண நிலை மிகவும் ஏற்றது. நல்ல, செழிப்பான, வடிகால் வசதியுடைய மணல் கலந்த இருபொறை பூமியாக இருப்பது அவசியம். மண்ணில் உள்ள காரைக் கடினத் தன்மை pH) 5.5 முதல் 6.6 வரை இருக்கலாம்.

பயிரிடும் பருவம்:

முட்டைக்கோசுக்குச் சொன்னதைப் போல்

பொறுக்கு ரகங்கள்:

'பூசா கட்கி' (Pusa Katki) போன்ற முந்திய ரகமும் மற்றும் 'சுனோ பால்' (Snow Ball) போன்ற பிந்திய ரகமும், சிபாரிசு செய் யப்படுகிறது.

சாகுபடிக் குறிப்புகள்:-

நிலத்தைப் பண்படுத்தலும், நடுதலும்:

முட்டைக்கோசுக்குச் செய்வதைப் போல்.

பின்செய் நேர்த்தியும், நீர்ப்பாய்ச்சுதலும்:

இரண்டு அல்லது மூன்று முறை களை எடுத்து நட்டு 35 நாட் கள் கழித்து மேலுரமாக அம்மோனியம் சல்பேட் உரமிட்டு செடி களுக்கு மண் அணைக்கவும். ஆரம்ப காலத்தில் வாரம் ஒரு முறை யும் பின்பு தேவைக்கேற்றாற்போல நீர்ப் பாய்ச்சவும். சூரிய வெளிச்சத்தில் காலிபிளவர் வண்ணம் கெட்டு தரம் குறையாமல் இருக்க இலைகளைத் தூக்கி, பூவைச் சுற்றிக் கட்டிவிடவும்.

பயிர் பாதுகாப்பு :

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை :

நன்ருக வளர்ச்சியடைந்து, காய்கறிக்கு வேண்டிய அளவு முற்றிய காலிபிளவர்களை அறுவடை செய்ய வேண்டும். இலைகளுக்கு அடியில் வெட்டி, பூவுடன் சிறிதளவு இலையை விட்டு, மீதமுள்ள இலைகளைக் கலைத்து விடவும். ஒரு ஏக்கருக்கு 8 முதல் 12 டன் வரை மகசூல் கிடைக்கும்.

காலிபிளவர் ஒரு ஏக்கரில் பயிரிட வேண்டிய பொருட்கள் :

விதை	:	*200 முதல் 275 கிராம்*	
உரம்	:	*தொழு உரம்*	: 8 டன்
		அம்மோனியம் சல்பேட்	: 250 கிலோ
		சூபர் பாஸ்பேட்	: 200 கிலோ
		மியூரியேட் ஆப் பொட்டாஷ்	: 32 கிலோ

பயிர் பாதுகாப்பு மருந்துகள் : (*ஒரு முறை உபயோசிக்க*)

முட்டைக் கோசுக்கு வேண்டியதைப் போல்.

நூல்கோல்

இதுவும் தமிழ்நாட்டில் மலைப் பிரதேசங்களில் பயிரிடப்படும் ஐரோப்பிய காய்கறிகளில் ஒன்று. முக்கியமாக 'சி' உயிர்ச்சத்துடன் இதர உயிர்ச் சத்துக்களும், தாதுப் பொருட்களும் அதிக அளவில் உள்ளன.

தேவையான தட்பவெப்ப நிலையும் மண்சாரமும் :

முட்டைக்கோசுக்கு வேண்டியதைப் போல்.

பயிரிடும் பருவம் :

முட்டைக்கோசு பயிரிடும் பருவங்களில் இதைப் பயிரிடலாம்.

பொறுக்கு ரகங்கள்:

வெள்ளை வியன்னு (White Vienna) போன்ற முந்திய ரகமும், ஊதா வியன்னு (Purple Vienna) போன்ற பிந்திய ரகமும் சிபாரிசு செய்யப்படுகிறது.

சாகுபடி குறிப்புகள்:-

நிலத்தைப் பண்டுத்தலும், நடுதலும்:

முட்டைக்கோசுக்குச் செய்வதைப் போலவே. ஆனல் பார்களின் இடைவெளி 30 செ. மீ. ஆகவும், செடிக்குச் செடி 20 செ. மீ. இருப்பது அவசியம்.

பின்செய்நேர்த்தியும், நீர் பாய்ச்சுதலும்:

வேண்டிய பொழுது களைஎடுக்கவும். நட்டவுடன் நீர்ப்பாய்ச்சி பின்பு வாரம் ஒரு முறையும் நீர் பாய்ச்சவும். நட்டு 35 நாட்கள் கழித்து செடிகளுக்கு பாதி அளவு அம்மோனியம் சல்பேட் மேலுரம் இட்டு செடிகளுக்கு மண் அணைக்கவும்.

பயிர் பாதுகாப்பு:

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை:

நூல்கோல் கிழங்குகள் 5 முதல் 7 செ. மீ. அளவு குறுக்களவு அடைந்தவுடன் அறுவடை செய்யலாம். ஏக்கருக்கு 8 டன் மகசூல் கிடைக்கும்.

நூல்கோல் ஒரு ஏக்கரில் பயிரிட வேண்டிய பொருட்கள்:

விதை: 400 கிராம்

உரம்:
பயிர் பாதுகாப்பு மருந்துகள்: } முட்டைக்கோசுக்கு சொன்னதைப் போல்.

பட்டாணி

பட்டாணி ஒரு காய்கறி மட்டுமல்லாமல், ஓர் பயறு வகையும் ஆகும். எத்தியோப்பியா நாட்டிலிருந்து நமது நாட்டிற்கு

அறிமுகம் செய்யப்பட்டது. பட்டாணியில் எளிதில் ஜீரணம் செய்யக்கூடிய புரதச் சத்துக்கள் அதிக அளவுலும், மாவுச் சத்துக்கள் மற்றும் தாதுப் பொருட்களும் உள்ளன. காய்கறியாக வும் 'சூப்'பாகவும், பதப்படுத்தப்பட்ட பட்டாணியாகவும் உப யோகப்படுத்தலாம்.

தட்பவெப்ப நிலையும், மண் சாரமும் :-

குளிர் காலமே பட்டாணி பயிரிட ஏற்றது. அதிக அளவு வெப்பமுள்ள இடங்களில் விதைப் பிடிப்பு (Seed set) பாதிக்கப் பட்டு பட்டாணியின் தரமும் மணமும் குறைகிறது. வடிகால் வசதி யுள்ள, மணற்பாங்கான இருபொறை நிலம் சிறந்தது. மண்ணில் இருக்க வேண்டிய காறை கடினத் தன்மையின் (pH) அளவு 6 முதல் 7.5 வரை இருக்கவேண்டும்.

பயிரிடும் பருவம் :-

சமவெளியில் அக்டோபர்-நவம்பர் மாதங்களிலும், மலைப் பிரதேசங்களில் மார்ச் முதல் மே மாதம் வரையிலும் விதைக் கலாம். மலைப் பிரதேசங்களில் 2 பயிர் எடுக்கலாம்.

பொறுக்கு ரகங்கள் :-

கீழ்க்கண்ட ரகங்கள் சிபாரிசு செய்யப்படுகிறது.

சமவெளிக்கு:-

1. ஏர்லி அசாஜி (Early Asauji) உருண்டை விதை
2. ஏர்லி பாட்ஜர் (Early Badger) சொரசொரப்பு விதை
3. போன் வில்லி (Bonne Ville) சொரசொரப்பு விதை
4. NP. 20
5. சில்வியா (Sylvia)

மலைப் பிரதேசத்திற்கு:-

1. ஏர்லி ஜயன்ட் (Early Giant)
2. அல்டர் மான் (Alderman)

சாகுபடி குறிப்புகள் :-

நிலத்தைப் பண்படுத்தலும், விதைத்தலும்:

நிலத்தை நன்றாக உழுது பண்படுத்தி, கடைசி உழவுக்கு முன்னால் தொழு உரமிட்டு குட்டை ரகங்களுக்கு ஒரு மீட்டர்

சதுர உயரப் பாத்திகளும், உயரமான ரகங்களுக்கு ஒன்றரை மீட்டர் சதுர உயரப் பாத்திகளும் பிடிக்கவும். பாத்திகளின் இடைவெளியில் வாய்க்கால் இருப்பது நீர்ப் பாய்ச்சுவதற்கு எளிதாகவே இருக்கும். இரசாயன உரமிட்டு, மூடி பாத்திகளின் ஓரத்தில் மூன்று செ.மீட்டர் ஆழத்தில், ஒன்று அல்லது ஒன்றரை செ.மீ. இடைவெளியில் விதைகளை ஊன்றவும்.

பின்செய் நேர்த்தியும், நீர்ப் பாய்ச்சுதலும்:

அடிக்கடி களை எடுத்து நிலத்தை சுத்தமாக வைக்கவும். செடிகளை 15 செ. மீட்டர் உயரத்தில் வளர்ந்த பிறகு தப்பை வைத்துக் கட்டவும். வாரம் ஒருமுறை நீர்ப்பாய்ச்சவும்.

பயிர் பாதுகாப்பு:

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை:

பட்டாணி நன்ருக விளைந்து பிஞ்சுகளாக இருக்கும்பொழுது அறுவடை செய்யவும், அதாவது பட்டாணி பச்சை நிறத்திலிருந்து இளம்பச்சை நிறமாக மாறும்பொழுது அறுவடை செய்யவேண்டும. முந்திய ரகங்களில் ஏக்கருக்கு 1,500 முதல் 2,000 கிலோ வரையில் பச்சைக் காய்கள் மகசூலும் பிந்திய ரகங்களில் 2,590 கிலோமுதல் 3,000 கிலோ வரை பச்சைக் காய்கள் மகசூலும் கிடைக்கும்.

பட்டாணி ஒரு ஏக்கரில் பயிரிட தேவைப்படும் பொருட்கள்:

விதை:- 40 கிலோ

உரம்:- தொழு உரம் - 8 டன்
அம்மோனியம் சல்பேட் - 50 கிலோ
சூப்பர் பாஸ்பேட் - 180 கிலோ
மியூரியேட் ஆப் பொட்டாஷ் - 40 கிலோ

பயிர் பாதுகாப்புமருந்துகள்:

(ஒருமுறை உபயோகிக்க)

50 சத கரையும் டி.டி.டி.	— 1 கிலோ
மாலதியான்	— 600மி.லிட்டர்
செரசான் அல்லது அகரசான் தூள்	80 கிராம்
கந்தகத் தூள்	10 கிலோ
டைத்தேன் Z78 அல்லது 'சினப்'	— 800 கிராம்

சீமை அவரை (பீன்ஸ்)

இந்தியாவில் பரவலாகப் பல இடங்ளில் அதிக அளவில் பயிரிடப்படும் பீன்ஸ் வகைகளில் 'பிரன்சு' பீன்ஸ் மிகவும் முக்கியமானது. தென் அமெரிக்காவிலிருந்து அறிமுகப்படுத்தப் பட்ட காய்கறி. காய்ந்த மற்றும் பிஞ்சு பீன்ஸ் காய்கள் விரும்பி உபயோகிக்கப்படுகிறது. இதில் புரதச்சத்து, உயிர்ச்சத்துக்கள் சுண்ணும்புச்சத்து மற்றும் இரும்பு போன்ற தாதுப்பொருட்களும் அதிக அளவில் உள்ளன.

தேவையான தட்பவெட்ப நிலையும், மண் சாரமும்:

கடல் மட்டத்திலிருந்து 2,000 மீட்டர் உயரம் உள்ள இடங் களில் குளிர்காலங்களில் பீன்ஸ் பயிரிடலாம். சராசரி 70 முதல் 100 செ.மீ. வரை மழையளவு பீன்ஸ் சாகுபடிக்கு ஏற்றது. பழத் தோட்டங்களில் குளிர் மற்றும் நிழல்படும்படியான இடங்களில் பழமரங்களுக்கு இடையே ஊடுபயிராக சாகுபடி செய்ய ஏற்ற பலவகை மண்ணில் பயிர் செய்யலாம் என்ருலும் மணல் கலந்த இருபொறை பூமி மிகவும் சிறந்தது. மண்ணில் இருக்கவேண்டிய (pH) காறை காடித்தன்மையின் அளவு 5.5-க்குக் குறைவாக இருக்கவேண்டும்.

சமவெளியில் ஆகஸ்ட் முதல் அக்டோபர் மாதம் வரையிலும் மலைப்பிரதேசங்களில் மார்ச் முதல் மே வரையிலும் விதைக்கலாம்

பொறுக்கு ரகங்கள் :-

கீழ்கண்ட ரகங்கள் சாகுபடிக்கு சிபாரிசு செய்யப்படுகிறது.

அடர்த்தியாக வளரும் ரகங்கள்:-

1) கண்டென்டர் (Contender)
2) ஜயன்ட்ஸ்டிரிங்லெஸ் (Giant Stringless)

போல் ரகங்கள் (கொடி ரகங்கள்):-

கென்டக்கி வொன்டர் (Kentucky Wonder)

சாகுபடி குறிப்புகள் :-

நிலத்தைப் பண்படுத்தலும். விதைத்தலும் :-

நிலத்தை நன்ருக நான்கு முறை உழுது, பண்படுத்தி. தொழு உரமும், இரசாயன உரமுமிட்டு 50 முதல் 80 செ.மீ. இடைவெளியில் பார்கள் ஓட்டவும். பார்களின் பக்கவாட்டில், 8 முதல் 10 செ.மீ இடைவெளியில் ஒரு இடத்திற்கு ஆறு விதைகள்வீதம் ஊன்றவும். விதைகள் முளைவிட்ட பிறகு ஒரு வாரம் கழித்து இடத்திற்கு 3 அல்லது 4 நாற்றுக்கள்விட்டு மற்றவைகளைக் களைத்துவிடவும்.

பின்செய் நேர்த்தியும், நீர்ப் பாய்ச்சுதலும் :

விதைத்து உடனேயும் பின்பு வாரம் ஒருமுறையும் நீர்ப் பாய்ச்சவும். தேவைக்கேற்ப களை எடுக்கவும். கொடி ரகங்களாக இருந்தால் 20 முதல் 25 செ. மீ. உயரமுள்ள குச்சிகளைச் செடிகளுக்கு வைத்துக் கட்டவும். பூக்கும் தருவாயில் மற்றும் காய் வளரும் பருவங்களிலும் அதிகமாக நீர்ப் பாய்ச்சக் கூடாது.

பயிர் பாதுகாப்பு:

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை:

பூ மலர ஆரம்பித்து 2 அல்லது 3 வாரங்கள் கழித்து இளங் காய்களை அறுவடை செய்யலாம். இளங்காய்களின் மகசூல் ஒரு ஏக்கருக்கு அடர்த்தியான ரகங்களில் 1000 முதல் 1,600 கிலோ வரையும், கொடி ரகங்களில் 2,400 கிலோ முதல் 3,800 கிலோ வரையும் இருக்கும்.

பீன்ஸ் பயிரிட ஒரு ஏக்கருக்கு வேண்டிய பொருட்கள் :-

விதை :-

அடர்த்தியாக படரும் ரகங்கள்:	35 முதல் 40 கிலோவரை
கொடி ரகங்கள்:	10 முதல் 12 கிலோவரை

இரசாயன உரங்கள் :-

அம்மோனியம் சல்பேட்:	100 கிலோ
சூப்பர் பாஸ்பேட்:	200 ,,
மியூரியேட் ஆப் பொட்டாஷ்:	50 ,,

பயிர் பாதுகாப்பு மருந்து :-

கந்தகத் தூள்	—	10 கிலோ
செரசான் தூள்	...	20 முதல் 80 கிராம்
சினப் அல்லது டைத்தேன் Z-78	...	800 கிலோ

கொத்தவரை

இந்தியாவில் பல இடங்களில் பயிர் செய்யப்படுகிறது. காய்கறிப் பயிராக மட்டுமல்லாமல், பசுந்தாள் உரப்பயிராகவும், தீவனப் பயிராகவும் மற்றும் விதைக்காகவும் பயிர் செய்யப்படு கிறது. விதை ஒரு வகைப் பசை (Gum) எடுப்பதற்கு உபயோ கிக்கப்படுகிறது. இளங்காய்களை மற்ற அவரை ரகங்களைப்போல் சமையலுக்கு உபயோகப்படுத்தலாம். கொத்தவரையில் அதிக அளவில் 'ஏ' உயிர்ச்சத்தும், இரும்புச்சத்தும் மற்றும் சிறிதளவு 'சி' உயிர்ச்சத்தும் இருக்கின்றன.

தேவையான தட்ப வெட்ப நிலையும் மண் சாரமும்:

சம அளவு வெப்பமுள்ள பருவ காலங்களில் பயிரிடும் காய் கறி கொத்தவரை. மழை பருவங்களிலும் வசந்தகாலத்திலும் பயிர் செய்யலாம். பலவகைமண்ணில் பயிரிடலாம். இருப்பினும் வடிகால் வசதியுடைய மணல் பாங்கான இருபொறை பூமியே சிறந்தது.

பயிரிடும் பருவம்:-

பிப்ரவரி முதல் மே மாதம் வரையிலும் மற்றும் ஜுலை ஆகஸ்ட் மாதங்களிலும் விதைக்கலாம்.

பொறுக்கு ரகங்கள்:

பூசா சடபஹார் (Pusa Sadabahar), பூசா மொஸ்மி (Pusa Mousmi) மற்றும் பூசா நவபஹார் (Pusa Navabahar) போன்ற இரகங்கள் சிபாரிசு செய்யப்படுகிறது.

நிலத்தைப் பண்படுத்தலும், நடுதலும் :

நிலத்தை நன்ருக உழுது பண்படுத்தி, தொழு உரம் இரசாயன உரம் முதலியவைகளைப் போட்டு பின்பு 45 செ. மீ.

இடைவெளியில் பார்கள் பிடிக்கவும். பாக்டீரியா நுண்ணுயிர்க் கலவையில் நனைத்த விதைகளைப் பார்களின் பக்கவாட்டில் 20செ.மீ 30 செ.மீ இடைவெளிவிட்டு விதைக்கவும்.

பின்செய் நேர்த்தியும், நீர்ப் பாய்ச்சுதலும் :-

விதைத்து 15 நாட்கள் மற்றும் 30 நாட்கள் கழித்து இரு முறை களை எடுக்கவும். விதைத்தவுடனே நீர்ப்பாய்ச்சி பின்பு வாரம் ஒருமுறை நீர்ப்பாய்ச்சவும்.

பூச்சி பூஞ்சாள நோய்களும் பயிர் பாதுகாப்பு முறைகளும் :-

தனி அட்டவணையைப் பார்க்க.

அறுவடை:

இளங்காய்களை முற்ற விடாமல் பறிக்கவும். ஹெக்டேருக்கு 2,000 முதல் 3,200 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

கொத்தவரை ஒரு ஏக்கருக்கு பயிரிட வேண்டிய பொருட்கள்:

விதை:- 4 கிலோ

உரம்:-

தொழு உரம்	:	10 டன்
அம்மோனியம் சல்பேட்	:	50 கிலோ
சூப்பர் பாஸ்பேட்	:	120 கிலோ

பயிர் பாதுகாப்பு மருந்துகள்:

கார்பரி 10 சத தூள் (செவின்)	:	10 கிலோ
மாலதியான்	:	600 மி.லி.
டைதேன் Z 8 அல்லது சினப்	:	800 கிராம்

வெங்காயம்

தாளித சுவைப் பொருட்கள் தரும் காய்கறிப் பயிர்களில் வெங்காயம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். பண்டைய காலம் தொட்டு நமது நாட்டில் சாகுபடியில் இருந்து வருகிறது. வெங்காயத்தைப் பச்சையாகவும், சமைத்தும் மற்றும் பல வகைகளிலும் உபயோகப்படுத்தலாம். ‘பி’ உயிர்ச்சத்தும், சிறிதளவு ‘சி’ உயிர்சத்தும் வெங்காயத்தில் உள்ளன. அந்நிய செலவாணி தரும் வணிகப் பயிர்களில் வெங்காயம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ் நாட்டில் சுமார் 30,000 ஏக்கர் நிலப்பரப்பில் வெங்காயம் பயிரிடப்படுகிறது.

தேவையான தட்ப வெட்ப நிலையும் மண்சாரமும் :-

பலவகை மற்றும் மாறுபட்ட சீதோஷ்ண நிலைகளில் வெங்காயம் பயிரிட முடியும் என்ருலும் சராசரி சீதோஷ்ண நிலை களிலும், அதிக அளவு வெப்பமோ அல்லது குளிரோ இல்லாத இடங்களிலும் அதிக அளவு மகசூல் தரும். கடல் மட்டத்திற்கு மேல் 7000 அடி உயரம் வரை பயிரிடலாம். 90 செ மீ, அளவுக்கு மேல் மழையுள்ள இடங்களில் கோடை காலத்தில் கூடப் பயிர் செய்யலாம். பலவகை மண்ணில் சாகுபடி செய்யமுடியுமென்ருலும் செழிப்புள்ள பூமிகளே வெங்காயத்திற்கு சிறந்தது.

பயிரிடும் பருவம் :-

வருடம் முழுவதும் பயிரிடலாம். வெங்காயம் குமிழ் பிடிப்பதற்கு முன்பு உள்ள காலத்தில் சுமாரான அளவு வெப்பமும் குமிழ் பிடித்து முற்றும் தருவாயில் ஒளி, அதிகமுள்ள வரட்சியான சீதோஷ்ண நிலையும் மிகவும் அவசியம். தமிழ் நாட்டில் சிபாரிசு செய்யப்படும் முக்கிய பருவங்களாவது :- 1) ஜூன் முதல் அக்டோபர் வரை, 2) அக்டோபர் முதல் ஜனவரி வரை, மற்றும் 3) ஜனவரி முதல் ஜூன் வரை.

பொறுக்கு ரகங்கள் :-

கோ. 1 :- கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு முழுவதற்கும் சிபாரிசு செய்யப் படுகிறது. இது ஒரு சிறிய வெங்காய ரகம். இது அறுபத்தைந்தே நாட்கள் வயதுடையது. வெங்காயம் மிகுந்த காரமுடனும் அதிக நாள் கெடாமல் வைத்திருக்கவும் ஏற்ற ஒரு ரகம். ஏக்கருக்கு 8,000 கிலோ மகசூல் கிடைக்கும.

ஏர்லி கிரானே (Early Grano) : புது டெல்லி பாரத விவசாய ஆராய்ச்சிக் கூடத்தால் சிபாரிசு செய்யப்படுகிறது. மஞ்சள் நிறமுள்ள நீண்ட உருண்டை வடிவான சுமாரான கார முள்ள வெங்காய குமிழ்கள் கிடைக்கும். மொத்த வயது 59 நாட்கள்.

பூசா சிகப்பு (Pusa Red) : இதுவும் பாரத விவசாய ஆராய்ச்சிக்கூடம் சிபாரிசு செய்யும் ஒரு ரகம். நடுத்தர பரும னுடைய உருண்டை வடிவமான சிகப்பு நிறமுடன், குறைந்த கார முள்ள வெங்காயக் குமிழ்கள் தரும் ரகம். மொத்த வயது 85 நாட்கள்.

சர்குபடி குறிப்புகள்

நிலத்தைப் பண்படுத்தலும் நடுதலும் :

விதைகளை நாற்றங்காலில் விதைத்து பின்பு நாற்றுக்களை எடுத்து நடவு செய்யலாம். அல்லது வெங்காயக் குமிழ்கள் அப்படியே நடவு செய்யலாம். ஏதாவது ஒரு முறையைப் பின் பற்றலாம். நிலத்தை நன்ருக உழுது, பண்படுத்தி தொழு உரமும், ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து 20 கிலோ மணிச்சத்து மற்றும் 40 கிலோ சாம்பல்சத்து என்ற விகிதத்தில் இரசாயன உரமும் இடவும். 2 மீ. நிளமும் $1\frac{3}{4}$ மீட்டர் அகலம உள்ள பாத்திகளோ அல்லது 30 முதல் 45 செ. மீ. இடைவெளியில் பார்களோ பிடிக்க வும் ஆறு வாரங்கள் வயதுடைய வெங்காய நாற்றுக்களை 10 செ.மீ. இடைவெளியில் நடவும். பார்களில் மூன்று வரிசைகள் நடலாம். அதாவது பார்களின் உச்சியில் ஒரு வரிசையும், பக்கவாட்டில் இரு புறம் இரண்டு வரிசையுமாக மூன்று வரிசை நடலாம் நாற்றங்கால் முறை பெரிய வெங்காயத்திற்கு (பெல்லாரி வெங்காயம்) ஏற்றது.

சிறிய வெங்காயத்திற்கு, ஒரு சென்டிமீட்டர் குறுக்களவு உள்ள குமிழ்கள் அப்படியே பார்களின் பக்கவாட்டில் 10 செ. மீ. இடைவெளியில் மேலே சொன்னமாதிரி ஒரு பாரில் மூன்று வரிசை வருமாறு நடவு செய்யலாம்.

பின்செய் நேர்த்தியும் நீர்ப்பாய்ச்சுதலும்

நான்கு முறை களை எடுக்கவும். ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்து வீதம் இரசாயன உரத்தை நட்டு ஒருமாதம் கழித்து மேலுரமாக இடவும். வாரம் ஒருமுறை நீர்ப்பாய்ச்சவும. அறு வடைக்கு மூன்று நாட்களுக்கு முன்பு இறுதியாக நீர்ப்பாய்ச்ச வும். வெங்காயக் குமிழ்கள் வளர்ச்சிக்கு சூரிய வெளிச்சமும், காற்றோட்டமும் அவசியம். ஆகையினல் செடிகளுக்கு மண் அணைக்க வேண்டியதில்லை. விதைக்காம்புகளை அவ்வப்பொழுது அகற்றிவிட வேண்டும். இல்லையென்ருல் வெங்காயம் அதிக நாட் கள் கெடாமல் இருக்காது.

பயிர் பாதுகாப்பு:

தனி அட்டவணையைப் பார்க்க

அறுவடை :

நட்டு 100 முதல் 105 நாட்களில் பெரிய (பெல்லாரி) வெங் காயம் அறுவடைக்கு வரும். சிறிய வெங்காயம் 90 நாட்களில்

தயாராகிவிடும். வெங்காயச் செடியில் உள்ள இலைகள் மேலிருந்து கீழாக மஞ்சள் நிறமடைந்து வாடிக்கீழே விழுந்துவிடும். இதுவே வெங்காயம் முற்றியதற்கு அறிகுறி. செடிகளைக் குமிழ்களுடன் பிடுங்கி, பின்பு இலைகளையும் பரவலாகக் கிடக்கும் வெங்காயச் சருகுகளையும் அக்ற்றி விடவும். ஏக்கருக்கு 6000 சிலோ பெரிய வெங்காயமும், 3000 கிலோ சிறிய வெங்காயமும் மகசூல் கிடைக்கும்.

வெங்காயம் ஒரு ஏக்கரில் பயிரிடவேண்டிய பொருட்கள்:

விதை:-	800 கிராம் விதை அல்லது 600 கிலோ வெங்காயக் குமிழ்கள்.		
உரம்:	தொழு உரம்	=	10 டன்
	அம்மோனியம் சல்பேட்	=	100 கிலோ
	சூபர் பாஸ்பேட்	=	60 ,,
	மியூரியேட் ஆப் பொட்டாஸ்	=	40 ,,

பயிர் பாதுகாப்பு மருந்து: (ஒருமுறை உபயோகிக்க):-

மாலதியான்	=	600 மி.லிட்டர்
டைதேன் Z - 78	=	1.2 கிலோ

1. பூச்சிகள்

தொகுப்பு: (மு. கோபாலன், சு. உத்தமசாமி, பூச்சி இயல் பிரிவு)

வரிசை எண்	காய்கறியின் பெயர்	தாக்கும் பூச்சிகள்	செடிகளில் காணப்படும் அறிகுறிகள்	தடுப்பு முறைகள்
1	வெண்டை	i) பச்சைத் தத்துப் பூச்சி (Jassids)	தாக்கப்பட்ட இலைகளின் ஓரம் காய்ந்து மஞ்சள் நிறமாகவோ அல்லது பழுப்பு நிறமாகவோ மாறும். இலைகள் மேல்நோக்கி சுருண்டு கிண்ண வடிவமாக மாறும்.	விதைக்கும்போது சால்விரக்ஸ் (solvirex 5 G) அல்லது டைசிஸ்டான் குருணைகளை ஏக்கருக்கு 8 கிலோ வீதம் சால்களில் இட வேண்டும். அல்லது
		ii) அசுவிணி (Aphid)	தாக்கப்பட்ட இலைகள் சுருண்டு வாட ஆரம்பிக்கும். தாக்கப்பட்ட இலைகளின் கீழ் பச்சைநிற அசுவிணிகள் காணப்படும் எறும்புகளும் காணப்படும்.	நட்ட 15-ம் நாள் முதல் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை செவிமால் 750 கிராம் அல்லது தயோடான் 600 மி. லி. அல்லது கார்பரில் கரையும் தூள் 1 கிலோ நீரில் கரைத்து ஒரு ஏக்கருக்கு நீரில் கரைத்து தெளிக்கவும்.

1	2	3	4	5
		iii) குருத்து மற்றும் காய்ப்புழு	புழுக்கள் தண்டுகளிலும் காய்களிலும் துளைத்துக்கொண்டு உட்செல்லும்.	நட்ட 21-ம் நாள் முதல் செவிமால் 750 கிராம் அல்லது தயோடான் 500 மி. லி. அல்லது கார்பரில் நனையும் தூள் 1 கிலோ ஏக்கருக்கு நீரில் கலந்து தெளிக்கவும்
		iv) சிகப்புச் சிலந்தி (Mite)	இலைகளின் மேலும் கீழும் சிலந்தி வலைகளும், சிகப்புநிற சிலந்திகளும் காணப்படும். இலைகள் மஞ்சள் நிறமாகக் மாறும்.	டிரைதியான் ஏக்கருக்கு 800 மி. லி. சிலந்திகள் காணப்படும் போது தெளிக்க வேண்டும். அல்லது ஏக்கருக்கு 10 கிலோ வீதம் கந்தகத்தூள் தூவவும்.
2	கத்தரி	i) பச்சைத் தத்துப் பூச்சி ii) அவுசுணி	வெண்டையில் உள்ளது போல.	செடிநட்ட பத்தாவது நாள் சால்விரக்ஸ் அல்லது டைசிஸ்டான் குருணைகள் ஏக்கருக்கு 12கிலோ வீதம செடிகளின் ஓரமாக இட்டு நீர்ப்பாய்ச்ச வேண்டும். (அல்லது) செவிமால் 750 கிராம் அல்லது தயோடான் 600 மி. லி. ஏக்கருக்கு நீரில் கரைத்து செடி நட்ட 51-வது நாள்முதல் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ஒரு ஏக்தருக்கு தெளிக்கவும்.

1	2	3	4	5
		iii) புள்ளி வண்டு (Epilachna)	இலைகளில் உள்ள பசுமை பாகங்களை சுரண்டி சாப்பிட்டு விடுவதால் இலைகள் சேதமடையும்.	செவிமால் 750 கிராம் அல்லது கார்பரில் நனையும் தூள் 1 கிலோ ஒரு ஏக்கருக்கு வண்டுகள் காணும் போது தெளிக்கலாம்.
		iv) இலைப்புழுக்கள்	புழுக்கள் இலைகளைத் தின்று சேதம் உண்டாக்கும்.	மேலே உள்ளது போல.
		v) குருத்து மற்றும் காய்ப்புழு	இளஞ் செடிகளில் புழுக்கள் குருத்தை துளைத்து சேதம் உண்டாக்கும். தாக்கப்பட்ட செடிகள் காய்ந்து விடும். இப்புழுக்கள் காய்களையும் துளைத்து சேதம் உண்டாக்கும்.	நட்ட பத்தாவது நாள் குருணை மருந்து இடப்பட்டிருந்தால் செடி நட்ட 45-வது நாள் முதல் 15 நாட்களுக்கு ஒரு முறையும், குருணை மருந்து இடாமல் இருந்தால் செடி நட்ட 20-வது நாள்முதல் 15 நாட்களுக்கு ஒருமுறை கீழ்கண்ட மருந்துகளில் ஏதாவது ஒன்றை நீரில் கலந்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும். 1. செவிமால் 750 கிராம் 2. தயோடான் 600 மி.லி. 3, பிர்லேன் 800 மி.லி. 4. கார்பரில் 600 கிராம்

1	2	3	4	5
		vi) சிகப்புச் சிலந்தி	வெண்டையில் உள்ளது போல	வெண்டையில் உள்ளது போல
		vii) சாம்பல் நிற வண்டு (Ash weevil)	i) வண்டின் புழுக்கள் மண்ணில் காணப்படும். அவை செடிகளின் வேர்களை உண்பதால் செடிகள் வாடி நாளடைவில் காய ஆரம் பிக்கும். ii) வண்டுகள் இலைகளைத் தின்று காய ஆரம்பிக்கும்.	அல்டிரின் (Aldrin) அல்லது டைஅல்டிரின் Dieldrin)ஏக்கருக்கு 15கிலோ தூளை செடியின் வேர்ப் பாகத்தில் இட்டு நீர்ப்பாய்ச்ச வேண்டும். (செடி நட்ட 10 நாட் களில் குருணை மருந்து இடப்பட் டிருந்தால் மேற்கண்ட தூளை இட வேண்டியதில்லை.)
		viii) மாவுப் பூச்சி (Mealy bug)	செடிகளின்மேல் வெள்ளைநிறமாக பஞ்சு போல் காணப்படும். சாறு உறிஞ்சப்படுவதால் வளர்ச்சி குறையும்.	பாரதியான் அல்லது மாலதியான் 500 ம. லி. நீரில் கரைத்து ஒரு ஏக்கரில் தெளிக்கலாம்.
		ix) கண்ணாடிப் பூச்சி (Tingids)	செடிகளின் இலைகளில் உள்ள சாற்றை உறிஞ்சுவதால் செடி களின் வளர்ச்சி குறையும்.	மேலே உள்ளது போல.
3	தக்காளி	i) காய்ப் புழுக்கள்	செடிகள் பூப்பதற்கு முன்பு தளிர் இலைகளையும் பின்பு பூக்களையும் காய்க்க ஆரம்பித்த உடன் காய்களையும் தாக்கி சேதம்	கத்தரி காய்ப்புழுவிற்கு உள்ளது போல.

1	2	3	4	5
			விளைவிக்கும்.	
		ii) கடலை வண்டு (Epilachna)	கத்தரி புள்ளி வண்டில் உள்ளது போல	கத்தரி புள்ளி வண்டிற்கு கூறியது போல்.
4	மிளகாய்	i) இலைப் பேன் (Thrips)	இலைகளில் உள்ள சாற்றை இப் பேன்கள் உறுஞ்சுவதால் இலைகள் சுருண்டு வாடஆரம்பிக்கும். செடியின் வளர்ச்சிகுன்றி காணப்படும்	செடிகள் நட்ட 10-வது நாள் திமெட் (Thimet) குருணைகளை ஏக்கருக்கு 4 கிலோ வீதம் அல்லது சால்விரக்ஸ் குருணை 8 கிலோ வீதம் இடவும். அல்லது ரேகார் ஏக்கருக்கு 600 மி.லி 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கலாம்.
		ii) காய்ப்புழு	மிளகாயின் உள்ளே புழுக்கள் துளைத்துச் சென்று காய்களை உதிரச்செய்யும்.	வெண்டை காய்ப் புழுவிற்கு சொன்னது போல
5	கொடிக்காய்கள் (பரங்கி, பூசணி, பாகல் முதலியன)	i) அசுவிணி	வெண்டையில் சொன்னது போல	வெண்டையில் சொன்னது போல
		ii) இலையைத்தின்னும் புழுக்கள்	புழுக்கள் இலைகளைத் தின்று சேதம் விளைவிக்கும்.	மாலதியான் ஏக்கருக்கு 500 மி.லி புழுக்கள் காணப்படும் போது நீரில் கரைத்து தெளிக்கவும்.
		iii) இலைகளைத் தின்னும் வண்டுகள்	i) வண்டின் புழுப்பருவம் வேர்களையும், மற்றும் தண்டுகளையும்	புழுக்கள் காணப்பட்டால் அல்டிரின் (Aldrin) தூளை அல்லது

1	2	3	4	5
			துளைத்து சேதம் விளைவிக்கும். ii) வண்டுகள் இலைகளைத்தின்னும்	டைஅல்டிரின் (Dieldrin) தூளை கத்தரியில் சொன்னது போல மண்ணில் இடவும். வண்டுகளை ஒழிக்க மாலதியான் 500 மி. லி. ஏக்கருக்கு தெளிக்கவும்.
		iv) கடலை வண்டு (Epilachna)	கத்தரி புள்ளி வண்டிற்கு சொன்னது போல்	கத்தரி புள்ளி வண்டிற்கு சொன்னது போல்.
		v) பழ ஈ (Fruit fly)	ஈக்களின் புழுக்கள் காய்களைத் துளைத்து விடும். இதனல் பழங்கள் அழுகி விடும்.	அ) தாக்கப்பட்ட பழங்களை அழித்துவிட வேண்டும். ஆ) இமிடான் தூள் அல்லது டிப்டிரக்ஸ்தூள் ஏக்கருக்கு 10கிலோ 15 நாட்களுக்கு ஒருமுறை தூவலாம். இ) மாலதியான் ஏக்கருக்கு 500 மி.லி. அல்லது பென்தியான் 500 மி.லி. பூக்க ஆரம்பித்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கவும்.
	முட்டைக்கோஸ் மற்றும் மலைக் காய்கறிகள் பயறு வகைகள்	i) முட்டைக்கோசைத் துளைக்கும் புழுக்கள்	புழுக்கள் இலைகளை ஒன்றோடு ஒன்றுபிணைதது அதனுள் இருந்து இலைகளைத் தின்னும். அல்லது முட்டைக் கோசின் உள்ளேயும்	

1	2	3	4	5
			மற்றும் தண்டின் உள்ளேயும் துளைத்து சேதப்படுத்தும்.	புழுக்கள் காணப்படும் போது மாலதியான் ஏக்கருக்கு 600 மி லி அல்லது செவின் நனையும் தூள் ஒரு கிலோ நீரில் கலந்து தெளிக்கவும்.
		ii) ஈப்பூச்சி (Sawfly)	புழுக்கள் இலைகளின ஓரங்களைத் தின்று சேதப்படுத்தும்.	
		iii) இலைசுருட்டும் பூச்சி (Leafwebber)	புழுக்கள் இலைகளைச் சுருட்டி இலைகளைத் தின்னும். இதனல் சிலந்திக்கூடு போன்றவற்றை உண்டாக்கும். பூ மொக்கையும் புழுக்கள் தாக்கும்.	
		iv) வெட்டும் புழுக்கள் (Cutworms)	இரவு நேரங்களில் புழுக்கள் முட்டைக்கோசு மற்றும் காய்கறிகளின் இலைகளைத் தின்னும்.	
		v) அசுவிணி	இலைகளின் சாறு உறிஞ்சப்படுவதால் இலைகள் கருகி மஞ்சள் நிறமடையும்.	ரேகார் 600 மி.லி ஒரு ஏக்கரில் அசுவிணி காணப்படும் போது தெளிக்கவும்.
7.	பயறு வகைகள்	i) அசுவிணி	இலைகளின் சாறு இப்பூச்சிகளால் உறிஞ்சப்படுவதால் இலைகள் காய ஆரம்பிக்கும்.	மேற் சொன்னது போல.
		ii) காய்த் துளைக்கும் புழு	புழுக்கள் காய்களைத்துச் சென்று சேதம் விளைவிக்கும்.	பூக்க ஆரம்பித்ததிலிருந்து ரோகார் 600 மி. லி. அல்லது செவிமால் 750 கிராம் அல்லது

1	2	3	4	5
				செவின் நனையும் தூள் 1 கிலோ ஒரு ஏக்கருக்கு நீரில் கரைத்து தெளிக்கவும்.
		iii) இலைப்புழு	புழுக்கள் இலைகளைத் தின்று சேதம் விளைவிக்கும்.	மாலதியான் ஏக்கருக்கு 600 மி.லி தெளிககலாம் அல்லது செவின் 10 சத தூள் ஏக்கருக்கு 10கிலோ தூவலாம்.
		iv) இலைப்பேன்	கூட்டமாக இலைகளின் சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் காய்ந்து விடும. பூக்களையும் தாக்கும்.	ரோகார் ஏச்கருக்கு 600 மி. லி தெளிக்கவும் அல்லது செவின் 10 சத தூள் ஏக்கருக்கு 10கிலோ தூவலாம்.
		v) பட்டாணி இலைப் புழுக்கள் (Semiloopers)	இலைகளைத் தின்று சேதம் விளைவிக்கும்.	மாலதியான் ஏக்கருக்கு 600 மி.லி தெளிக்கலாம் அல்லது பி.எச்.சி. ஏக்கருக்கு 10 கிலோ தூவலாம்.
		vi) பட்டாணி இலை துளைக்கும் புழு (Leaf miner)	செடிகளின் இலைகளைத் துளைத்துச்சென்று இப்புழுக்கள் சேதப் படுத்தும்.	மேற்கூறியது போல.
		vii) ஈக்கள்	ஈக்களின் புழுக்கள் தண்டுகளைத் துளைத்டச் சேதப்படுத்தும்.	தாக்கப்பட்ட இடத்தை அப்புறப் படுத்திவிட்டு மாலதியான் தெளிக்கலாம்.

1	2	3	4	5
8.	தண்டுக்கீரை	கீரை வண்டு (Weevil)	வண்டின் புழுக்கள் தண்டுகளைத் துளைக்கும்.	மேற்கூறியது போல்.
9.	வெங்காயம்	i) இலைப்பேன்	சிறு பூச்சிகள் தளிர் இலைகளின் அடிப்பாகத்தில் இருந்துகொண்டு சாற்றை உறிஞ்சி விடுகிறது. இதனல் இலைகளின் மேல் பாகத்தில் வெண்புள்ளிகள் தோன்றி, இலைகள் வெளுத்து, உலர்ந்து, உதிர்ந்து விடுகிறது.	டிரைதியான் ஏக்கருக்கு 600மி.லி அல்லது ரோகார் 600 மி. லி தெளிக்கலாம்.
		ii) வெட்டும் புழுக்கள் (Cutworms)	இலைகளை இப்புழுக்கள் தின்னும்.	மேற்கூறியதைப் போல்.

பின் குறிப்பு; தெளிப்பதற்கு ஒரு ஏக்கருக்குத் தேவையான தண்ணீரின் அளவு

விசை தெளிப்பானில் : 80 லிட்டர்

மற்ற தெளிப்பான்களில் : 400 லிட்டர்

உழவர் பயிற்சி நிலையம்

கோயமுத்தூர்

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

உழவர் பயிற்சி நிலையம்
கோவை.

தரமான விதைகளுக்கும் செடிகளுக்கும்

பல்கலைக்கழக விதை விற்பனை நிலையத்தை

அணுகவும்.

பல்கலைக்கழக செய்தி வெளியீடு எண். 10 (மறு பதிப்பு)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அச்சகம், கோவை-3